விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 30 வெள்ளிக்கிழமை (16.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-506)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## சுகாதார நடைமுறைகளை மீறினால்
# 10 ஆயிரம் ரூபாய் அபராதம் 6 மாதங்கள் சிறை
## விசேட வர்த்தமானி வெளியாகியது

(கொழும்பு)

சமூக இடைவெளியைப் பேணுதல், முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட முக்கிய சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் அடங்கிய விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படலாம் அல்லது 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் அல்லது இரண்டு தண்டனையும் விதிக்கப் படலாம் என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)



## 74 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா தொற்றுக் குள்ளாகிய 74 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இவர்களில் 13 பேர் மினுவாங்கொட 23

## குருநகரில் குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் யாழ்.குருநகர் டேவிட் றோட் பகுதியில் இடம்பெற் 23

## வவுனியாவில் சுற்றிவளைப்பு 10 பேர் கைது

(வவுனியா)

வவுனியாவில் தேசிய நீர் உயிரின செய்கை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்று 23

## நாடளாவிய ரீதியில் ஆங்காங்கே கொரோனா கொத்தணி உருவாகும்
### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

மினுவாங்கொட கொத்தணி கொரோனா தொற்று பரவல் இலங்கையில் கொரோனா 3ஆவது அலையாக மாறியுள்ள நிலையில் எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் சிறிய அளவிலான பல 23

## யாழ். சுண்டுக்குளியில் வீடு ஒன்று தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுண்டுக்குளி பகுதியில் வீடு ஒன்று நேற்று தீக்கிரையாகியுள்ளது.

சுண்டுக்குளி விதானையார் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டது. 23

## முல்லைத்தீவு தனிமைப்படுத்தலில் 3 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் சோதனை 23

## அளவெட்டி தம்மளையில் வீடு புகுந்து திருட்டு
### பட்டப்பகலில் யாரும் இல்லாத சமயம் திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மேற்கு, தம்மளைப் பகுதியில் திருட்டுச் சம்பவம் ஒன்று 23

## நிலைமைகள் மோசமானால் எந்தநேரமும் ஊரடங்கு அமுலாகும்
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா பரவல் ஆபத்து நிலவும் நிலையில் அதிக ஆபத்துள்ள பகுதிகளில் தேவை ஏற்படின் ஊரடங்கு பிறப்பிக்கப்படும் என இராணுவத் தளபதியும் கொரோனா எதிர்ப்பு 23



## கொரோனா வைரஸ் தொற்றாளர்களுடன்
### யாழுக்கும் பேருந்து பயணம்

14ஆம் பக்கம் பார்க்க

### சுற்றுலா வழிகாட்டிக்கு கொரோனா
## சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட 130 பேர் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

சுற்றுலா வழிகாட்டியாக செயற்பட்டு வந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவருக்கு சிகிச்சை வழங்கிய சுகாதார ஊழியர்கள் எண்மர் உள்ளிட்ட 130 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து தெரிய 24

## முகக் கவசம் அணியாத இருவர் பொலிஸாரால் கைது
### தலா ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுதலை

(கொழும்பு)

முகக் கவசம் அணியாமல் விடுதியில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவர் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணை 23

## முல்லைத்தீவில் வீதி விபத்து பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேருந்து மோதியதில் சிறுவன் படுகாயம்

## கொடிகாமத்தில் சம்பவம்

(கொடிகாமம்)

யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்து கொடிகாமம் - புத்தூர்ச் சந்திப் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவனை மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் படுகாயம டைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் மீசாலை மேற்கை சேர்ந்த 15 வயதான கோ. லக்சன் என்ற சிறுவனே படுகாயமடைந்தவனாவான்.

சிறுவனை மோதித்தள்ளிய பேருந்து கட்டுப்பாட்டினை இழந்து ரயில் தண்ட வாளத்தில் ஏறியுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசார ணைகளை கொடிகாமம் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (ம-03,30)

## திருமலை — மட்டக்களப்பு வீதியில்

# பஸ் - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில், கங்கைப் பாலத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் மூதூர், மல்லிகைத்தீவு பகுதியை சேர்ந்த தர்மசேனன் நித்தியரூபன் (வயது 37) என்பவர் உயிரிழந்துள்ளார்.

மூதூரில் இருந்து தம்பலகாமத்துக்கு ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர் களை ஏற்றிச் சென்ற பேருந்தும் கிண்ணி யாவில் இருந்து மூதூர் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில், மோட்டார் சைக் கிளை ஓட்டிச் சென்ற மேற்படி நபர் ஸ்தலத் திலேயே உயிரிழந்துள்ளார் என பொலி ஸார் தெரிவித்தனர்.

சடலம் மூதூர் தள வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக திருகோண மலை பொது வைத்தியசாலைக்கு எடுத் துச் செல்லப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர். (ம-03)


# மரண அறிவித்தல்

## வயித்திலிங்கம் இராசதுரை (சிவம்)

(ஓய்வு பெற்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை சாலைப் பரிசோதனைப் பொறுப்பதிகாரி)

தோற்றம் - 15.07.1939 மறைவு - 15.10.2020



பழைய வீதி, கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் இராசதுரை (K.V.R) (ஓய்வு பெற்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை சாலைப் பரிசோதனைப் பொறுப்பதிகாரி) நேற்று (15.10.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயித் திலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமேனி - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் பவளமணியின் அன்புக் கணவரும் மைதிலி (தையல் போதனா ஆசிரியர் - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலகம், காரைதீவு), ரேவதி (ஆசிரியை - யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை, யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ), வாசுகி (ஆசிரியை - யா/ தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம் ) ஆகியோரின பாசமிகு தகப்பனாரும் தவராஜா (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - தொழில் திணைக்களம், கல்முனை), தர்மசீலன் (நீர்க்குழாய் பொருத் துனர்), ஹரிகரன் (ஆசிரியர் - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) ஆகியோ ரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், இராசம்மா, வேலுப் பிள்ளை (தவம்) மற்றும் நல்லையா (பவா) ஆகியோரின் பாசமிகு சகோதர னும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், கோகிலமணி மற்றும் துரைசிங்கம் (இத்தாலி), மனோன்மணி, துரைராஜா (ஜேர்மனி), தர்மராஜா, ஜெயமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதனின் (பவளம் கடை, ஐயனார் ஸ்ரோர் உரிமையாளர் ) சிறிய தகப்பனாரும் சபரீசன், விபுதன் (மாணவர்கள் - யா/ யூனியன் கல்லூரி), சகானுஜா (மாணவி - யா/ உடுவில் மகளிர் கல்லூரி ), முகிலாசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-529)

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

077 073 6409
077 799 9323
077 620 5049

தகவல்:- குடும்பத்தினர்


# கடமையை சரியாக செய்ததற்காக மட்டு. அரச அதிபர் இடமாற்றம்

## தமிழ் தேசிய கூட்டமைப்பு கண்டனம்

(மட்டக்களப்பு)

கடமைகளை சரியாக செய்ததற்காக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா இடமாற்றப்பட்டமைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) மாலை இடம்பெற்ற கட் சியின் முக்கியஸ்தர்களுடனான கலந்து ரையாடலின்போது கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி இன்றைக்குச் சொல்வதைப் போலவே அவருடைய அடிவருடிகளும் இன்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஜனாதிபதி சொல்கிறார் நான் ஏதாவது வாயால் சொன்னால் அதுதான் சுற்று நிரூபம் என்று எடுத்துக்கொள்ளுங்கள் என்று. இந்நிலையில்தான் ஒருவர் கேட்டிருக்கிறார், 'நான் சொல்வதுதான் சுற்றுநிரூபம்என்று சொல்லியாவது ஒரு சுற்று நிரூபத்தை கொடுத்தால் என்ன' என்று.

எனவே, சட்டத்தால் அதிகாரம் கொடுக் கப்படவில்லை. ஆனால், தங்களிடம்தான் அதிகாரம் இருக்கிறது என்ற தோரணை யில் இயங்குகிறார்கள். இயக்குகிறார்கள், அவர்கள் சொல்வதுதான் சட்டமென்று நடைபெறுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதி பரை உடனடியாக இடமாற்றம் செய்தது எப்படி? அவர் தன்னுடைய கடமையை சரியாகச் செய்ததன் காரணமாக அவர் பழிவாங்கப்பட்டுள்ளார்.

அரசியல் பழிவாங்கலுக்கான ஜனா திபதி ஆணைக்குழுக்கள் எல்லாம் வைத்து ஏதேதோ பேசப்படுகின்றன. இப்போது இந்த அரசாங்கத்தினால் நேரடியாக மட்டக்களப்பில் அரசியல் பழிவாங்கல் நடந்திருக்கிறது. ஒரு அரச அதிகாரி அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

எனவே, இதற்கான கண்டனத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# மீசாலை கிழக்கு கமலாம்பிகை வித்தியாலயத்தில் திருட்டு

(கொடிகாமம்)

சாவகச்சேரி-மீசாலை கிழக்கு கமலாம் பிகை வித்தியாலயத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு திருட்டு இடம் பெற்றிருப்பதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

பாடசாலை அறையில் பூட்டி வைக் கப்பட்டிருந்த கதிரைகள் மற்றும் அண் மையில் கொரோனா தனிமைப்படுத் தலுக்காக பாடசாலைக்கு வழங்கப்பட்டி ருந்த மெத்தைகள் ஆகியனவே இவ் வாறு திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் பாடசாலையில் காணப்பட்ட நீர் இறைக்கும் மோட்டரும் திருட முயற்சிக் கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருட்டு தொடர்பான மேலதிக விசாரணை களை சாவகச்சேரி பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (ம-03,30)

# அரசியல் திருத்தத்திற்கு எதிராக மக்களின் எதிர்ப்பினை வலுக்கச் செய்ய நடவடிக்கை

## கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன்

(அம்பாறை)

புதிய அரசியல் திருத்தத்திற்கு எதிராக மக்களின் எதிர்ப்பினை வலுக்கச்செய் வதற்காக பல நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிர தேச சபை தவிசாளர் கே. ஜெயசிறிலின் அலுவலகத்திற்கு விஜயம் செய்திருந்த நிலையில் நேற்று செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில், புதிய அரசி யல் அமைப்பு திருத்தத்திற்கு எதிராக பல்வேறு பிரசாரங்களை செய்து வருகி ன்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் செயல மர்வு எம்மால் நடத்தப்பட்டது. அம்பாறை காரைதீவு பகுதியிலும் மக்கள் பிரதி நிதிகளை அழைத்து இத்திருத்தம் குறி த்து கலந்துரையாடியுள்ளோம்.

இப்புதிய திருத்தத்திற்கு எதிராக மக்களின் எதிர்ப்பினை வலுக்கச்செய் வதற்காக பல நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம். ஏனெனில் இத்திருத் தமானது ஜனநாயக விரோத செயலாக உள்ளது.

இதனை நிறைவேற்ற நாங்கள் அனும தித்தால் இந்நாட்டில் ஜனநாயக கட்ட மைப்பினை பேணாது போனால் மக்களுக் கான நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடி யாமல் போகும்.

அது போன்று நிலம் சம்பந்தமான பல திட்டங்களையும் அரசாங்கம் தற்போது அமுல்படுத்தி வருகின்றது.

எனவேதான், இத்திருத்தத்தை நிறை வேற்றாமல் ஜனநாயக பண்பினை பேண வேண்டியது எமது கடமையாக உள்ளது. எனவே, பொறுத்திருந்து பாருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-03)

# கொரோனாவை தேர்தல் பிரசாரமாக்கிய அரசு அதனை ஒழிக்கத் தவறி விட்டது

## மனுஷ குற்றச்சாட்டு



**அ (கொழும்பு)**

**அரசாங்கம் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை அரசியல் கோஷமாக பயன்படுத்தியதே அன்றி நாட்டில் கொரோனாவை ஒழிப்பதற்கான வேலைத்திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் இருந்து வந்தவர்களால் பிராண்டிக்ஸ் நிறுவனத்தில்கொரோனா பரவி இருக்கலாம். அப்படி இல்லை என்றால் இலங்கையில் அந்த வைரஸ் இருந்துள்ளது.

தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுவதற்காக அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலில் முதல் கட்டத்தை மூடி மறைத்துள்ளது.

கொரோனா வைரஸ் ஒழிக்கப்பட்டது என்று அரசாங்கம் தேர்தலில் பிரசார கோஷம் பயன்படுத்தியதே அன்றி, நாட்டில் கொரோனா ஒழிக்கப்படவில்லை.

பிராண்டிக்ஸ் நிறுவனத்தினரை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பொதுச்சுகாதார அதிகாரிகளை பயன்படுத்தவில்லை.

விமான நிலையத்தின் ஊடாக அண்மையில் வந்த சீனப் பிரஜைகள் தனிமைப்படுத்தப்படவில்லை. எமக்கு தெரியாமல் எத்தனை பேர் தனிமைப்படுத்தப்படாமல் இலங்கைக்குள் வந்திருப்பார்கள்.

வெளிநாடுகளில் தொழில்களுக்காக் சென்ற லட்சக்கணக்கான இலங்கையர்கள் வெளிநாடுகளில் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

எத்தனை பேரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் இயலுமை அரசாங்கத்திற்கு இருப்பதாக இராணுவத் தளபதி கூறுகிறார்.

அப்படியானால் ஏன் வெளிநாடுகளில் தவிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வர மறுக்கின்றனர்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை வரவழைப்பதற்கு பதிலாக பிராண்டிக்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் இந்தியர்களை இலங்கை அழைத்து வர அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதுவே அரசாங்கம் தேசிய பாதுகாப்பு தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்பதற்கான சிறந்த உதாரணம்.

தமக்கு நெருக்கமானவர்களுக்கு உதவிசெய்ய போய்அரசாங்கம்கொரோனா பரவ இடமளித்துள்ளது. இதற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (நி-7)

---

# 20 இற்கு எதிரான மதத்தலைவர்களின் நிலைப்பாடுகளுக்கு அரசு செவிசாய்க்கும்

## கரு நம்பிக்கை

(கொழும்பு)


நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கில் முன்மொழியப்பட்டிருக்கும் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு எதிராக பௌத்த மற்றும் கத்தோலிக்க மதத்தலைவர்கள் இணைந்து குரல்கொடுப்பது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்திருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, 20 வது திருத்தத்திற்கு எதிரான மதத்தலைவர்கள், சிவில் சமூகத்தினர், அரசியல் தலைவர்களின் நிலைப்பாடுகளுக்கு செவிசாய்க்கும் நேர்மை அரசாங்கத்திற்கு இருக்குமென்று நம்புவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது, தற்போது முன்மொழியப்பட்டிருக்கும் அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று இரண்டு பௌத்த மகாசங்கங்கள் வலியுறுத்தியிருக்கின்றன.

நாட்டிற்கு தேவையொன்று ஏற்பட்டிருக்கும் நிலையில், மகாசங்கத்தினரின் பாரம்பரியத்தை நிலைநாட்டும் விதமாக அவர்கள் இத்தகைய முற்போக்கான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளமை மிகவும் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

மதத்தலைவர்களும் சிவில் சமூகத்தலைவர்களும் தேசத்தை முன்னிறுத்தி ஒன்றுபட வேண்டும் என்பதற்காகவே மாதுலுவாவே சோபித தேரர் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தை உருவாக்கினார்.

இந்நிலையில் தற்போது நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக பௌத்த மற்றும் கத்தோலிக்க மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து குரல் கொடுப்பது வெகுவாக ஊக்கமளிக்கிறது.



நாட்டிலுள்ள மதத்தலைவர்கள், சிவில் சமூகத்தினர், தொழிற்சங்கங்கள், ஆளுந்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் மத்தியில் முன்மொழியப்பட்டிருக்கும் அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் தொடர்பான கவலைகளும் விசனமும் அதிகரித்து வருகின்றன. அவர்களின் நிலைப்பாடுகளுக்கு செவிசாய்க்கும் நேர்மை அரசாங்கத்திற்கு இருக்கும் என்று நம்புகின்றேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். (நி-7)

---

## இளநீரில் போஷாக்குணவு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தைச் சேர்ந்த டைகூன் குழு, ஒரு புதிய உணவு உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இளநீரைப் பயன்படுத்தி போஷாக்கான மற்றும் சுவையான ஜெலி தயாரிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நூற்றுக்கு நூறு வீதம் இயற்கை உற்பத்தியாக இந்த ஜெலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஜெலியில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் எந்த வொரு செயற்கை பொருட்களும் அல்லது இரசாயனங்களும் இல்லை என இந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

அடிப்படை பொருட்களாக இளநீர், அதன் கொழுப்பு, சர்க்கரை மற்றும் ஜெலட்டின் ஆகிய பொருட்கள் மாத்திரமே பயன்படுத்தி இந்த ஜெலி தயாரிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# திணைக்கள ஊழியரின் கணவருக்கு கொரோனா இல்லை

(கொழும்பு)
பரீட்சைகள் திணைக்கள ஊழியர் ஒருவரின் கணவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் நேற்று ஊடக அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பரீட்சைகள் திணைக்களத்தின் விசாரணைப் பிரிவில் கடமை புரியும் பெண் அதிகாரியின் கணவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மைத் தன்மை கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வைத்தியர்களின் ஆலோசனையின் அடிப்படையில் குறித்த பெண் அதிகாரியின் கணவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின் அடிப்படையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)
நீர்வழங்கல் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.



இந்த இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நீர்வழங்கல் அமைச்சின் சார்பில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிற்கும் சீன அறிவியல் அகாடமியின் சார்பில் இலங்கையிலுள்ள சீனத்தூதரக விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஹூ வேயிற்கும் இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

நீர்வழங்கல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகிய விடயங்களில் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்பை மேலும் விரிவுபடுத்திக்கொள்வது பற்றி அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த யாங் ஜியேச்சி தலைமையிலான சீன உயர்மட்ட அதிகாரிகள் குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

அதன்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ஜ-4)

# குணமடைந்தோர் 3380

(கொழும்பு)
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 23 பேர் பூரண குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து இதுவரை 3,380 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

அதன்படி வெலிகந்த வைத்தியசாலையில் இருந்து 10 பேரும், தேசிய தொற்று நோயியல் நிலையத்தில் இருந்து 8 பேரும், ஈரனவிலா வைத்தியசாலையில் இருந்து 3 பேரும், அம்பாந்தோட்ட மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒரு வெளிநாட்டவர் என 23 பேர் முழுமையாக கொரோனாத் தொற்றிலிருந்து பூரண குணமடைந்து வீடு சென்றுள்ளனர். (ஜ-4)

## முகக்கவசம் அணியாத ஐம்பது பேருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் முகக்கவசம் அணியாமல் இருந்த 50 பேரை பொலிஸார் எச்சரித்து பின்னர் விடுவித்துள்ளனர்.

அங்கு வந்திருந்த வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் உள்ளிட்டவர்களுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# தொற்றாளர்கள் விஜயம் செய்த ஹோட்டல் ஊழியர்கள் தனிமைப்படுத்தலில்

(வெலிகம)
வெலிகமயில் உள்ள ஹோட்டலொன்றின் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக வெலிகம நகர சபையின் தலைவர் ரெஹான் ஜெயவிக்ரம தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள மினுவங்கொட ஆடைத்தொழிற்சாலையின் முகாமையாளர் குறித்த ஹோட்டலுக்கு (Marriott Hotel) அண்மையில் விஜயம் செய்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த ஒக்டோபர் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் ஹோட்டலுக்கு வருகை தந்ததாக வெலிகம நகர சபையின் தலைவர் ரெஹான் ஜெயவிக்ரம் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதன் விளைவாக, குறித்த ஹோட்டலின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு ஹோட்டலுக்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அங்கு கடமை புரியும் அனைத்து ஊழியர்களுக்கும் கட்டாய 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அனைத்து ஊழியர்கள் மற்றும் அங்கு வந்தவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படும் என்றும் அவர் பதிவிட்டுள்ளார். (நி-7)

# நவராத்திரியை முன்னிட்டு 40 இந்து ஆலயங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா நிதி



(கொழும்பு)
நவராத்திரி தினத்தை முன்னிட்டு இந்து சமய விழுமியங்களை ஊக்குவிக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 40 இந்து ஆலயங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

அதற்கமைய 10 ஆலய பரிபாலன சபைத்தலைவர்களுக்கான நிதியுதவிகளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதன்போது வழங்கினார்.

கடற்றொழில் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பிரதமரின் பதுளை மாவட்ட இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான், நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்த சாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஜ-4)

# கொரோனா பரவல் காரணமாக வெட்டுப்புள்ளி வெளியிடுவதில் தாமதம்

(கொழும்பு)
2019 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான வெட்டுப் புள்ளி தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


எனினும் தயாரிக்கப்பட்டுள்ள வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவது தொடர்பாக இதுவரை எந்தவொரு தீர்மானமும் எட்டப்படவில்லை என அந்த ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்தில் க.பொ.த. உயர்தர பரீட்சைகள் நடைபெற்ற நிலையில் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது. இதற்கு மாணவர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், கொரோனா அச்சுறுத்தல் நிலைமை காரணமாகவே வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (நி-7)

# உடைந்து விழுந்த உட்கூரை

(கொழும்பு)
மாத்தளை-லக்கல பிரதேச சபையின் கட்டடத்திற்குள் உள்ள உட்கூரை (Ceiling) உடைந்து வீழ்ந்துள்ளது.



லக்கலை பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இவ்வாறு உட்கூரை உடைந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது பொதுக்கூட்டத்தில் 15 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்த நிலையில், அதிர்ஷ்டவசமாக இந்த சம்பவத்தில் எந்தவொரு நபருக்கும் காயம் ஏற்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# பெரிய வெங்காயத்தை 100 ரூபாய்க்கு வாங்க முடிவு

(கொழும்பு)
உள்ளூர் பெரிய வெங்காயத்தை விவசாயிகளிடம் இருந்து 1 கிலோ பெரிய வெங்காயத்தை 100 ரூபாய்க்கு வாங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பெரிய வெங்காயம் இறக்குமதி செய்வதற்கான வரியை நீக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களால் பெரிய வெங்காயத்தினை சாதாரண விலைக்கு விற்பனை செய்ய முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# றிசாத்தை கைது செய்வது அபத்தம்

## ஹரீஸ் கண்டனம்

(கொழும்பு)

இலங்கை முஸ்லிம்களை இலக்குவைத்து முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் தலைமைகளுக்கும் அபகீர்த்தியை உண்டாக்க முயற்சித்துக் கொண்டிருக்கும் தெற்கின் கடும்போக்குவாத செயற்பாட்டாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஒரு சிறுபான்மை கட்சியின் தலைவரை இலக்குவைத்து செயற்படுவது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ் கவலை தெரிவித்துள்ளார்.

றிசாத் பதியுதீனைக் கைது செய்யும் முயற்சி தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த நாட்டில் இனவாத முரண்பாடுகளை உண்டாக்கி நாட்டைச் சீரழிக்கத் துடிக்கும் சில பேரினவாத சக்திகளின் திட்டங்களுக்கு அரசு செவிசாய்ப்பது அவ்வளவு ஆரோக்கியமான விடயமல்ல.

நாட்டிலுள்ள சகல இனங்களையும் சரி சமமாக மதித்து உரிய கௌரவத்தை வழங்க வேண்டிய அரசே ஜனநாயகக் கடமையைச் செய்வித்த அப்போதைய அமைச்சர் ஒருவரைக் கேள்விக்குட்படுத்திக் கைது செய்ய எத்தனிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு ஜனநாயகக் கடமையான வாக்கைச் செலுத்த வழியேற்படுத்திக் கொடுத்தார் என்பதைக் குற்றமாகச் சுமத்தி கைது செய்ய முனைவது கவலையளிக்கின்றது.

அரசின் இந்தச் செயலானது சிறுபான்மை மக்களை அரசிடமிருந்து வெகுவாகத் தூரமாக்கும் என்பதை அரசுக்கு கூறி வைக்க விரும்புகின்றேன். இவ்வாறான செயற்பாடுகளை மக்கள் பிரதிநிதி என்ற வகையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். (நி-7)

# வெறிச்சோடியது கட்டுநாயக்க




(கொழும்பு)

கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தில் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து நேற்று அதிகாலை 5 மணி முதல் கட்டுநாயக்க பொலிஸ் எல்லை பிரிவிற்குத் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து அப்பகுதிகளில் மக்கள் நடமாட்டம் இல்லாத காரணத்தினால் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது.

இதுவரையில் கம்பஹா மாவட்டத்தின் 19 பொலிஸ் எல்லை பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார். தனிமைப்படுத்தல் ஊரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் குறித்த பகுதிகளுக்குள் நுழையவோ அப்பகுதியை விட்டு வெளியேறவோ முடியாது. (ஜ-4)


2 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம் 03.06.1961
மறைவு 09.10.2018

அமரர். பொன்னையா குமாரகுலசிங்கம்
(புரட்டாதி அமாவாசை திதி)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
நீங்கள் எங்களைப் பிரிந்து சென்று
இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன
உம் அன்பான பேச்சையும்
உரிமையுடன் செய்யும் கடமைகளையும்
எம்மால் மறக்க முடியவில்லை
உங்கள் ஆத்மா ஆண்டவன் அடியில்
நித்திய அமைதி பெற பிரார்த்திக்கிறோம்

தெய்வங்கேணி வீதி, சரசாலை வடக்கு
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.
(C-527)


# ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது எல்லையில் மாற்றம்

(கொழும்பு)

தனியார் துறையில் தொழில் புரியும் ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது எல்லையை 60 வயது வரை அதிகரிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளளார்.

எதிர்காலத்தில் தனியார் துறை ஊழியர்களிடம் இருந்து நாட்டிற்கு மேலதிக சேவைகளைப் பெறும் நோக்கில் இதனை முன்னெடுக்க உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளர் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழிலாளர் ஆலோசனைக் குழு கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்குப் பணியாளர் சபை மற்றும் தொழிற்சங்கங்களின் முழு ஆதரவும் கிடைத்துள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், இது தொடர்பான இறுதி முடிவு அடுத்த தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் அறிவிக்கப்படும் எனவும் அதன் பின்னர் இந்த விடயம் தொடர்பான சட்டக் கொள்கைகள் தயாரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)


NORTH LANKA IIT CITY CAMPUS

பின்வரும் பாடநெறிகள் ஆரம்பமாகவுள்ளன!

M.Ed.
Duration: 01 Year
Entry Qualification: B.Ed./P.G.D.E

P.G.D.E
Duration : 01 Year
Entry Qualification : Any Degree

B.Ed. (Top - Up)
Duration: 01 Year
Entry Qualification: Teacher's Training College/College of Education

B.Ed
Duration : 03 Years
Entry Qualification : A/L

Ph.D / MPhil with Ph.D
Duration : 3 Years
Entry Qualification : Any Master Degree
(Medium - Tamil or Sinhala or English)

B.Sc in Computer Science (Top Up)
Duration : 1 Year
Entry Qualification : 2 Years Diploma / HND

B.Sc in Computer Science
Duration : 3 Years
Entry Qualification : G.C.E. A/L

B.Sc in Physical Education & Sports
Duration : 01 Year Entry Qualification : 2 Years Diploma
Duration : 03 Years
Entry Qualification : G.C.E (O/L) / (A/L)
அரசாங்க பாடசாலையில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள்

B.Sc in Psychological Counselling
Duration: 02 Years
Entry Qualification: 01 Year Diploma

விண்ணப்ப முடிவுத் திகதி: 23.10.2020

தொடர்புகளுக்கு:
Top Floor, People's Bank Building,
Stanley Road, Jaffna.
076 7504535, 021 4927088
(C-512)


# கைதாவதை தடுக்க றிசாத் மனு



(கொழும்பு)

தாம் கைது செய்யப்படுவதனைத் தடுக்கக் கோரி முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் றிசாத் பதியுதீனை கைது செய்ய பொலிஸ் தேடுதல் மேற்கொண்டு வருகின்றனர். சட்டமா அதிபரின் பணிப்புரைக்கு அமைய றிசாத் பதியுதீனை கைது செய்ய தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய கணக்காளர் ஒருவரை பொலிஸார் ஏற்கனவே கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில் சட்டத்தரணிகள் ஊடாக தாம் கைது செய்யப்படுவதனைத் தடுக்கக் கோரி முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளார். (நி-7)

## தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 117 பேர்

(யாழ்ப்பாணம்)

விடத்தற்பளை கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து 117 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். கட்டார் நாட்டிலிருந்து, அழைத்து வரப்பட்டவர்களில் 117 பேர் தனிமைப்படுத்தலிற்குள்ளாக்கப்பட்டு நேற்று முன் தினம் வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். விடத்தற்பளையிலுள்ள 52வது படைப்பிரிவில், உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 117 பேருக்குமே வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (5-101)

## நாளை நவராத்திரி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நவராத்திரி விழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி ஒன்பது நாள் வரை நடைபெறும். இந்துக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் இவ் விழா ஒன்பது நாட்கள் நடைபெறும். இவ் விழாவில் முதல் மூன்று நாட்களும் துர்க்கைக்கும் அடுத்து வரும் மூன்று நாட்களும் லட்சுமிக்கும் அதற்கடுத்து வரும் மூன்று நாட்கள் சரஸ்வதிக்கும் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று இறுதியாக விஜயதசமிபூஜையுடன் நிறைவு பெறும். (நி)

# யாழ்.போதனாவில் இரத்ததான முகாம்


(குப்பிழான்)

"விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணி ஏற்பாட்டில் விசேட இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெறவுள்ளது.

தற்போது யாழ்.குடாநாட்டு வைத்தியசாலைகளில் இரத்தத் தட்டுப்பாடு நிலவுவதைக் கருத்திற்கொண்டு மேற்படி இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா அசாதாரண சூழல் காரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் காரணமாகப் பொதுவிடங்களில் இரத்ததான முகாம் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் ஏற்பாடு செய்து நடத்தப்படும் இரத்த தான முகாம் நிகழ்விற்கு இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் முன்வந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென "விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)



இந்தியாவின், மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா முனைவர் ஏ.பி.ஜே.அப்துல்கலாமின் 89 ஆவது பிறந்தநாளான நேற்று (ஒக்டோபர் 15, 2020), யாழ்ப்பாண பொதுநூலகத்தில் உள்ள "இந்தியா கார்னரில்" உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு இந்தியத்துணைத் தூதுவர் பாலச்சந்திரனால் மலர்மாலை அணிவித்தும் மலர்தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் தூதரக அலுவலர்கள், தலைமைநூலகர், நூலக அலுவலர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (படம்:சிவசாந்தன்)



கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்கள் நெல்லியடி பொலிஸார் மற்றும் கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து கரணவாய்ப் பகுதியில் டெங்கு நோய் பரவாமல் தடுப்பதற்கு களத்தரிசிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (படம்:- மகாலிங்கம்)



2020/2021 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற் செய்கைக்கு ஏற்ப கால்நடை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்றது. இதில் பிரதேச செயலர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், விசேட அதிரடி படையினர், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்பினர் கலந்து கொண்டனர். (படம்: மகாலிங்கம்)

# உரமானியங்களைப் பெற்றுக்கொள்ளவும்

(கரணவாய்)

கரவெட்டி கமநல சேவைகள் நிலைய பிரிவிற்கு உட்பட நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளிற்கு 2020/2021 ஆம் ஆண்டு பெரும் போகத்திற்கான இலவச உரமானியம் கடந்த 7 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இன்று 16 ஆம் திகதி கரணவாய் தெற்கு கமக்கார அமைப்பிற்கும் எதிர்வரும் 19 ஆம் திகதி அத்தாய் கமக்கார அமைப்பிற்கும் 20ஆம் திகதி கரணவாய் மத்தி கமக்கார அமைப்பிற்கும் 21 ஆம் திகதி உடுப்பிட்டி மத்தி கமக்கார அமைப்பிற்கும் வழங்கப்பட உள்ளது.

விவசாயிகள் சுகாதார நடைமுறைகளினை பின்பற்றி சமூக இடைவெளிகளினை பேணி மானிய உரம் பெறுவதற்குரிய ஆவணங்களுடன் வருகை தந்து உரத்தினை பெற்றுக் கொள்ளுமாறு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (5-4-60)

# வீதி திருத்தப்பணி ஊழியர் இருவருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதி திருத்தப்பணிகள் மேற்கொண்டு வரும் இரு ஊழியர்கள் ஹம்பகா மாவட்டத்திலிருந்து வேலைக்கு வந்தமையினால் அவர்கள் வடமாகாண ஆளுநரின் உத்தரவிற்கு அமைவாக தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வடமாகாணத்தில் இடம்பெற்று வரும் வீதி திருத்தப் பணிகள் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை.

சுகாதார நடைமுறைகளுடன் ஊழியர்கள் வீதி திருத்தப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தென்பகுதி ஹம்பகா மாவட்டத்திலிருந்து வந்த இரு ஊழியர்கள் வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பி.சி.ஆர்.பரிசோதனைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த இருவரையும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏனையவர்கள் தொடர்ந்து வீதி திருத்தப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியால் கொழும்பிலிருந்து பொருட்கள் எடுத்து வருவதில் சில இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றோம்.

இருந்தும் உரியமுறையில் பணிகளை மேற்கொள்வதற்கு வடமாகாண ஆளுநர், ஒப்பந்தகாரர் வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளமையினால் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-4-299)

# ஊரடங்கு வதந்தியை நம்ப வேண்டாம்



(கொழும்பு)

நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப் போவதாக வெளியாகும் செய்திகளை நம்ப வேண்டாம் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்போவதாக பல வதந்திகள் பரப்பப்படுகின்றன.

ஆனால் இதுவரை அவ்வாறு எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

அதனால் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் இவ்வாறான செய்திகளை நம்ப வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றோம்.

அரசாங்க தகவல் திணைக்களம், ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் இணையத்தளங்கள் ஊடாக வெளியிடப்படுகின்ற தகவல்களை மாத்திரம் கேட்டு, உண்மை பொய்களை அறிந்து கொள்ளுங்கள்" என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான கடமை-மகிந்த அமரவீர

(கொழும்பு)

**சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படுவது குறித்து வேண்டிய இடங்களுக்குச் சென்று உண்மை தகவல்களை சேகரிப்பதற்கான உரிமை ஊடகவியலாளர்களுக்கு உள்ளது.**

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை அரசாங்கத்தின் பிரதான கடமையாக கருதுகின்றோம் என்று சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த வாரம் முல்லைத்தீவு மற்றும் மொனராகலை ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தகவல் சேகரிப்பதற்காக சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் மூலம் அறியக் கிடைத்தது. இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளேன்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு இனியொரு போதும் நாம் இடமளிக்கப் போவதில்லை. ஊடகவியலாளர்களுக்கு இவை தொடர்பில் ஆராய்வதற்கு உரிமையுள்ளது.

அந்த உரிமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்படமாட்டாது. சமூக வலைத்தள ஊடகவியலாளர்கள் சிலர் பொறுப்புடன் செயற்படாவிட்டாலும் பெரும்பாலான ஊடகவியலாளர்கள் மிகவும் பொறுப்புடன் செயற்படுகின்றனர்.

அதற்கான இடமளிக்கப்பட வேண்டும்.

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை அரசாங்கத்தின் பிரதான கடமையாகக் கருதுகின்றோம். எனவே அவர்களுக்கு வேண்டிய இடங்களுக்குச் சென்று சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படுவது குறித்து உண்மை தகவல்களைச் சேகரிக்க முடியும்.

அந்த வாய்ப்புக்களை நாம் நீக்கப் போவதில்லை. அதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

## நீதித்துறையின் பிரச்சினைகளை தீர்க்க 5 குழுக்கள் நியமனம்

(கொழும்பு)

நீதி நிலைநாட்டும் நடைமுறையை செயற்றிறன் மிக்கதாகவும் துரிதமானதாகவும் மாற்றுவதாக செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இதற்காக நீதியமைச்சர் அலி சப்ரி தாக்கல் செய்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. நீதித்துறையில் நிலவும் பிரச்சினைகளை மூன்று வருடங்களுக்குள் தீர்த்துத் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சர் ஐந்து குழுக்களை நியமித்துள்ளார்.

இந்தக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் இடம்பெற்றது. நீதிமன்றங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், குற்றவியல் சட்டங்களைத் திருத்தியமைத்தல், நீதிமன்ற வலைப் பின்னலை டிஜிற்றல்மயமாக்கல், வணிக மற்றும் சிவில் சட்டங்களைத் திருத்துதல் போன்ற பொறுப்புக்கள் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இ.போ.ச.வருமானம் 30 மில்லியனாக வீழ்ச்சி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் 30 மில்லியனால் வீழ்ச்சியடைந்துள்ளதென இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதி முகாமையாளர் எச்.ஏ.பண்டுக தெரிவித்தார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அன்றாட வருமானம் 75 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை கொரோனாத் தொற்றால் இது 45 மில்லியனாகக் குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 5 ஆயிரத்து 100 பேருந்துகள் சேவையில் ஈடுபட்ட நிலையில் தற்போது 4 ஆயிரத்து 500 பேருந்துகளே சேவையில் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

## விபத்தில் பொலிஸ் அதிகாரி காயம்




(கொழும்பு)

பாணந்துறை வடக்கு, ஹேனமுல்ல சந்தியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டுடன் மோதி பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காயமடைந்தார்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சட்டவிரோதமாக மோட்டார் சைக்கிள் பந்தயம் இடம்பெற்று வருவதாகக் கிடைத்த தகவலிற்கு அமைய பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அப்பகுதிக்குச் சென்றுள்ளார்.

இதன்போது ஒரு மோட்டார் சைக்கிள் பொலிஸ் வாகனத்தின் மீதும் ஒரு மோட்டார் சைக்கிள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீதும் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாணந்துறை வடக்குப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2<br>கி.பா: 24 1/4 சூரி, செவ் 6 இல்<br>உயரம்: **166cm**<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: **B/8933** | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 53 1/2 செவ் 7 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி (சுவீடன்)<br>எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன் ஐரோப்பா, லண்டன் மணமகன் விரும்பத்தக்கது<br>தொ.இ: **G/1088** |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 37 செவ் 2 இல் உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: பட்டதாரி கனடாவில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: **B/8934** | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 14 1/2 செவ் 12 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: **MBBS, Doctor**<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர்<br>தொ.இ: **G/1095** |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: செவ் 7 இல் உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: **MBBS, Doctor**<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: **B/8936** | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 93 சூரி, செவ் 1 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி பிரதம மொழி பெயர்ப்பாளர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர் போன்றோர்<br>தொ.இ: **G/1099** |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: செவ் 8 இல் உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:க.பொ.த.சா/த. சுவீடனில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் மணமகன் விவாகரத்தானவர்<br>தொ.இ: **B/8938** | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 48 செவ் 9 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: **G/1108** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நந்திக் களப்பு துப்புரவுப் பணிகள் அரச அதிபர் தலைமையில் ஆரம்பம்

(கண்டாவளை)

கடல் நீரேரி பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டம் 2020இன் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடல் களப்பின் நீர்ப்போக்குவரத்துக்கு தடையாக உள்ள களப்பின் அருகிலுள்ள வட்டுவாகல் பாலத்தின் கீழ் நீரோட்டத்திற்கு தடையாக உள்ள கற்களை அகற்றி சுத்தப்படுத்தல் செயற்றிட்டமானது மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனின் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையில் செல்வபுரம் மற்றும் கோயிற்குடியிருப்பு ஆகிய கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இவ் வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளன.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் இச் செயற்றிட்டத்தின் மூலம் பாலத்தின் நான்கு வடிகால்களினூடான நீர்ப் போக்குவரத்துக்கு தடையாக உள்ள கழிவுப்பொருட்கள் குறிப்பாக தேவையற்ற கற்கள் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றப்பட்டு சுத்தமாக்கப்படுவதனூடாக மீன்பிடிக் கைத்தொழில் மேம்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பொறியியலாளர், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்கள மாவட்ட உதவிப்பணிப்பாளர், வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள மாவட்ட உதவிப்பணிப்பாளர், குறித்த திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். (5-4-315)

# கசிப்புடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ராமநாதபுரம் நாவற்காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சந்தேக நபரிடமிருந்து 350 லீற்றர் கோடா, 40 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன. சந்தேகநபர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் என இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (5-4-316)

# உயர்தரப் பரீட்சைகள் நிறைவுற்றதும் மின் கம்பிகள் மாற்றப்படும்

(நெளுக்குளம்)

வவுனியாவில் மின்கம்பங்கள் சரிந்து விழும் நிலையில் காணப்படுவதாக வெளியாகிய செய்திக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை, மின்சார சபை பொறியியலாளர்கள் , உயர் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.


தற்போது க.பொ.த உயர்தரப்பரீட்சைகள் இடம்பெற்று வருவதால் மின்சாரத்தை துண்டிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

எனினும் இவ்வாறு சரிந்து காணப்படும் மின் கம்பத்தினால் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படவில்லை .

தற்போது நடைபெற்று வரும் பரீட்சைகள் நிறைவடைந்ததும் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பழுதடைந்த மின்கம்பங்களை அகற்றுவதற்கு அனுமதிகள் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு அவசர நிலை ஏற்படுமாக இருந்தால் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மின்சார சபை,வீதி திருத்தப்பணி உயர் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (5-4-299)

# கடும் காற்றினால் 13 வீடுகள் சேதம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் வீசி வரும் கடும் காற்று காரணமாக நேற்று முன்தினம் மட்டும் 13 வீடுகள் சேதமடைந்துள்ளன. பகுதியளவில் சேதமடைந்த 13 வீடுகளில் வசித்த 36 பேர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வவுனியா , செட்டிகுளம் போன்ற பகுதிகளில் ஏற்பட்டுள்ள காற்றின் வேகம் காரணமாக நேற்று முன்தினம் மட்டும் 13 வீடுகளின் கூரைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

எனினும் தமது வீடுகளில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்காக இழப்பீடுகள் பெற்றுக்கொடுப்பதற்கு அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4- 299)

# பாலைமரம் பாறி பேருந்தில் வீழ்ந்தது



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் பேருந்து நிலையத்தில் தரித்து நின்ற இ.போ.ச.பேருந்தின் மீது மரம் ஒன்று பாறி வீழ்ந்துள்ளது. எனினும் இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று இ.போ.ச. ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று பிற்பகல் 2 மணியளவில் குறித்த பேருந்து செட்டிகுளத்திலிருந்து வவுனியாவிற்கு செல்வதற்கு பேருந்து நிலையத்தில் தயாராக இருந்த போது அருகிலிருந்த பாரிய பாலைமரம் ஒன்று பேருந்தின் மீது பாறி வீழ்ந்துள்ளது. எனினும் பேருந்தில் இருந்தவர்களுக்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்று இ.போ.ச.ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (5-4-299)

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு வடக்கு ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்





(பரந்தன்)

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களான சண்முகம் தவசீலன் மற்றும் கணபதிப்பிள்ளை குமணன் ஆகியோர் கடந்த 12ஆம் திகதி முல்லைத்தீவு முறிப்புப் பகுதியில் மரக்கடத்தல்காரர்களால் தாக்கப்பட்டனர்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வடமா காணத்தின் சகல மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் இணைந்து முல்லைத்தீவில் பாரியளவிலான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை முன்னெடுத்திருந்ததுடன், அவர்களால் மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு கோசங்களை எழுப்பியதுடன், எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளோடு, மரக்கன்றுகள் மற்றும் மரக்கிளைகளைத் தாங்கியவாறு ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தொடர்ந்து பேரணியாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் சென்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அத்தியட்சகரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன், அவரிடம் மரக்கன்று ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அடுத்து மாவட்ட செயலகம் சென்று மாவட்ட செயலரின் பிரதிநிதி ஒருவரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டதுடன், மரக்கன்றும் கையளிக்கப்பட்டது.அடுத்து முல்லைத்தீவுமாவட்ட வன அலுவலகத் திலும் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

ஊடகவியலாளர்களுக்கு ஆதரவளிக்கும்வகையில் குறித்த ஆர்ப்பாட்டத்தில், வன்னிமாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் வினோநோகராதலிங் கம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப் பற்றுப் பிரதேச சபை உறுப்பினர்களான தி.இரவீந்திரன், சி.லோகேஸ்வரன் ஆகி யோர் கலந்துகொண்டனர். (5-4-312)

## இராசிபலன்

16.10.2020
புரட்டாதி 30, வெள்ளிக்கிழமை
அமாவாசை பின்னிரவு 2.02 மணிவரை
அத்தம் பிற்பகல் 3.55 மணிவரை
சுபநேரம் 6.02- 7.32 மணிவரை
இராகுகாலம் 10.32- 12.02 மணிவரை
சந்திராஷ்டமம்- பூரட்டாதி, உத்தரட்டாதி
அமாவாசை விரதம்

வளவன்

**மேஷம்** – ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி கைகூடும், கௌரவமான நாள்.

**ரிஷபம்** – வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசு வழியில் ஆதரவுண்டு, அருமையான நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** – பொதுக்காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** – நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும்.

**சிம்மம்** – எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பேச்சில் இனிமை தென்படும்.

**கன்னி** – வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** – வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், சுப விரயங்கள் கூடும் நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** – குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏற்படலாம், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** – செய்தொழில் மேன்மையுண்டு, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிறர் உதவியுண்டு.

**மகரம்** – போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்** – கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், முயற்சியில் தாமதம் ஏற்படலாம்.

**மீனம்** – சொந்த பந்தங்களின் வருகையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகளை நிறைவேற்றும் எண்ணம் மேலோங்கும், வருமானம் திருப்தி தரும்.

உனது கவலைதான் உனது மகிழ்ச்சியைத் திருடும் திருடன்

# ‘20’ஐ ஆளும் கட்சியினர் எதிர்க்கவில்லை

(கொழும்பு)

**20வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை ஆளும் கட்சியில் உள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**



சில பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பை முன்வைத்துள்ளனர். அதில் உள்ள சில விடயங்களை மாத்திரமே எதிர்க்கின்றனர்.

இதனைத் தவிர நாட்டு மக்களின் ஆணையில் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த ஜனாதிபதிக்கு, பொதுமக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு நாட்டை முன்னேற்றி முன்னோக்கிக் கொண்டு செல்ல அதிகாரம் இருக்க வேண்டும் என்பது தொடர்பில் விவாதங்கள் இல்லை.

அதனை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். 20 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சில வித்தியாசங்கள் சம்பந்தமாகவே கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் இந்தத் திருத்தச் சட்டம் தொடர்பாக தனக்கு தனிப்பட்ட ரீதியில் எந்த நிலைப்பாடுகளும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஆளும்கட்சியின் சில தரப்பினர் முன்வைத்துள்ள எதிர்ப்பு தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

# பொதுமக்கள் சந்திப்பு இணையத்தளம் மூலம்



(கொழும்பு)

நீதி அமைச்சின் பொதுமக்கள் சந்திப்பு தினத்தை இணையத்தளத்தின் மூலமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நிலைமையின் கீழ் பொதுமக்கள் நீதி அமைச்சிற்கு வருகை தருவதில் காணப்படும் சிரமங்களைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, நீதி அமைச்சர் அலி சப்ரியின் ஆலோசனையின் அடிப்படையில், திங்கட்கிழமைகளில் இடம்பெறும் பொதுமக்கள் சந்திப்பு தினத்தை இணையத்தளத்தின் ஊடாக முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதற்கான விசேட இணையப்பிரிவு ஒன்றும் நீதி அமைச்சினால் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை முன்வைப்பது தொடர்பான வழிகாட்டல்களை நீதி அமைச்சின் இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திங்கட்கிழமை பொதுமக்கள் சந்திப்பு தினத்துக்கான முறைப்பாடுகளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு முன்னர் முன்வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# வர்த்தகமாக மாறிய கொரோனா

## சம்பிக்க கடும் சாடல்



(கொழும்பு)

பணம்தொடர்பான பேராசை கொண்ட சிலர், கொரோனா தனிமைப்படுத்தல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை வர்த்தகமாக மாற்றிக்கொண்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டினார்.

இது சுகாதாரத் துறையினர் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உட்பட முழு மக்களுக்கு செய்து வரும் அர்ப்பணிப்புகளுக்கு செய்யும் அநீதி எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் ராஜகிரிய வாகன விபத்து தொடர்பான வழக்கில் ஆஜராகிய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாகச் சாதாரண மக்களைக் கைது செய்வது அநீதியானது. இந்த பிரச்சினையை மேலும் பெரிதுபடுத்துவது தேசிய குற்றம் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

11

(நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)



**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**கேள்வி 23:-** யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 7 பேர் தெரிவு செய்யப்படும் வாக்குச்சீட்டில் 10 பேர்களின் இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளனவே?

**பதில்:-** ஆம். தற்போதுள்ள தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் மாவட்டங்களுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட நியமனப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை மூன்று கூடுதலாக இருத்தல் வேண்டும்.

**கேள்வி 24:-** யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் தொகுதிகள் 11 ஆக இருக்கும் போது ஆசனங்களின் எண்ணிக்கை 7 ஆக உள்ளதே அது ஏன்?

**பதில்:-** தற்போது யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் தேர்தல் தொகுதி ஒன்று மட்டுமே அது 7 அங்கத்தவர்களைக் கொண்ட பல் உறுப்பினர் தொகுதியாகும். 1978 ஆம் ஆண்டுக்கு முன் இலங்கையில் தொகுதிவாரியான தேர்தல் முறைமை இருந்தது. அப்போது இலங்கை 160 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 11 தொகுதிகள் இருந்தன. 1978 இற்குப் பின் தேர்தல் முறையில் மாற்றம் ஏற்பட்டு விகிதாசார முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. விகிதாசார முறையின் கீழ் இத்தேர்தல் தொகுதிகள் வாக்களிப்பு பிரிவுகள் என்று அழைக்கப்படுகின்றன.

பாராளுமன்றத் தேர்தல்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 20 தேர்தல் மாவட்டங்கள் நாட்டின் நிர்வாக மாவட்ட எல்லைகளையே தங்கள் எல்லைகளாகவும் கொண்டுள்ளன. ஏனைய இரண்டு மாவட்டங்களில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களையும் வன்னித் தேர்தல் மாவட்டம் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களையும் தம்முள் அடக்கியுள்ளன.

98 ஆவது சரத்தின் முதலாம் பிரிவு பாராளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் எனவும் இவர்களுள் 196 உறுப்பினர்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்படுவர் எனவும் இவர்களுள் 36 உறுப்பினர்கள் ஒரு மாகாணத்துக்கு நான்கு பேர் என்ற அடிப்படையில் 9 மாகாணங்களுக்கும் பிரித்தளிக்கப்படுவர் எனவும் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் குறைந்தது ஒரு உறுப்பினரையாவது பெற்றுக் கொள்ளும் வகையில் இது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதனை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு மர்வட்டத்திற்குமான எண்ணிக்கை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. கொழும்பு-2, கம்பஹா-1, களுத்துறை-1, கண்டி-1, மாத்தளை-1, நுவரெலியா- 2, காலி-1, மாத்தறை- 1, அம்பாந்தோட்டை-2, யாழ்ப்பாணம்-1, வன்னி - 3, மட்டக்களப்பு- 1, அம்பாறை- 2, திருகோணமலை- 1, குருநாகல்- 2, புத்தளம்- 2, அநுராதபுரம்- 2, பொலநறுவை- 2, பதுளை-2, மொனாராகலை-2, இரத்தினபுரி-2, கேகாலை- 2, மொத்தம் 36.

எஞ்சிய 160 உறுப்பினர்களும் மாவட்டங்களில் வாக்காளர்களது விகிதாசாரத்துக்கேற்ப மாவட்டங்களுக்கு பிரித்தளிக்கப்படும். இதற்காக முழு இலங்கையினது மொத்த வாக்காளர் தொகையை 160 இனால் பிரிப்பதன் ஊடாக தேசிய கோட்டாத் தொகை அல்லது தகைமை பெறு தொகை பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தொகையினால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் மொத்த வாக்காளர் தொகையை வகுப்பதன் ஊடாக மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்கீடு செய்யப்படும். வருடாந்தம் வாக்காளர் தொகை கணிப்பீடு செய்யப்படுவதால், ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய ஆசன ஒதுக்கீடு வருடாந்தம் தேர்தல் ஆணையாளரால் கணிப்பிடப்படுகிறது.

இவ்வெண்ணிக்கையோடு மாகாணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 04 ஆசனங்களில் மாவட்டத்துக்குரிய ஆசனத்தையும் சேர்க்கும் போது கிடைக்கப்பெறுகின்ற ஆசனங்களின் எண்ணிக்கையே அம்மாவட்டத்துக்குரிய மொத்த ஆசனத்தொகையாகும். மீதமாக உள்ள 29 உறுப்பினர்கள் தேசியப்பட்டியல் ஊடாக நிரப்பீடு செய்யப்படுவர்.

2020 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு 2019 ஆம் ஆண்டு வாக்காளர் தொகை கணிப்பீட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை 7 ஆகும் (அட்டவணை-3).

அட்டவணை -3
**2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்**
**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு**
**ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர் 2019 | = 16,263,885 |
| தகைமை பெறு தொகை | = 16,263,885/160 |
| | = 101,650 |
| யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் | |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர் 2019 | = 571,848 |
| ஆசனங்களின் என்னிக்கை | = 571,848/101,650 |
| | = 6 |
| ஒதுக்கப்பட்ட மொத்த ஆசனங்கள் (6+1) = 7 | |

**கேள்வி 25:-** கட்சிகளுக்கான உறுப்பினர் எண்ணிக்கைகள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன?

**பதில்:-** ஒரு மாவட்டத்தில் கட்சிகள் பெற்ற வாக்குகள் எண்ணப்பட்ட பின், அம் மாவட்டத்தில் அதிக வாக்குகளைப்பெற்ற கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்குரிய போனஸாக அக்கட்சியிலிருந்து ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்படுவார். உறுப்பினர்களை ஒதுக்குவதற்காகத் தகுதி பெறும் ஒரு கட்சியோ அல்லது சுயேட்சைக் குழுவோ குறைந்த பட்சம் மொத்த வாக்குகளில் இருபதில் ஒரு பகுதியையாவது **(5%)** பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு பெறாத கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் நீக்கப்படும். அளிக்கப்பட்ட மொத்த வாக்கு எண்ணிக்கையிலிருந்து தகுதி பெறாத கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்ற வாக்குகள் கழிக்கப்படும். மிகுதி, அத்தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவாகவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையிலிருந்து ஒன்றைக் குறைத்து வரும் எண்ணினால் பிரிக்க வரும் ஈவு, ஆரம்பச் சுற்றில் ஒரு உறுப்பினரைப் பெறுவதற்குத் தேவையான வாக்கு எண்ணிக்கையாகும்.

மேற்படி ஈவினால் தகுதிபெற்ற கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்ற வாக்குகளை வகுக்கும் போது கிடைக்கும் ஈவுகளுக்குச் சமனான எண்ணிக்கையில் முதற் சுற்றில் உறுப்பினர்கள் ஒதுக்கப்படுவார்கள். முதற் சுற்றின் பின்னர் இன்னும் ஒதுக்குவதற்கு இடங்கள் இருப்பின் முதற் சுற்றில் வகுக்கும்போது கிடைத்த மிச்சங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கூடுதலாக மிச்சம் கிடைத்த கட்சிக்கு மிகுதியாகவுள்ள இடங்களில் முதலாவது இடம் வழங்கப்படும். முற்றாக ஒதுக்கி முடியும் வரை ஏனைய இடங்களும் இவ்வாறே கூடிய மிச்சம் உள்ள கட்சிகளுக்கு வழங்கப்படும்.

2020 ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலை எடுப்போமானால், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சகல கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் பெற்ற மொத்த வாக்குகள் 359,130 ஆகும்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு **(ITAK,TELO, PLOTE)**, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்), எங்கள் மக்கள் சக்தி கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி,ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி , ஐக்கிய சோசலிசக் கட்சி, ஜனசெத்த பெரமுன, ஜாதிக ஜன பலவேகய, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, புதிய ஜனநாயக முன்னணி, முன்னிலை சோசலிசக் கட்சி, ஜனநாய இடதுசாரி முன்னணி, லங்கா சம சமாஜ கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சமகி ஜனபலவேகய, சோசலிச சமத்துவக் கட்சி, சிங்கள தீப ஜாதிக பெரமுன மற்றும் 14 சுயேட்சைக் குழுகள் ஆகியவையும் போட்டியிட்டன.

ஒவ்வொரு கட்சி சார்பிலும் 10 வேட்பாளர்களின் படி 330 பேர் போட்டியிட்டனர். அதில் 5 கட்சிகளுக்கே ஆசனங்கள் கிடைத்தன. மற்றைய கட்சிகளும் சுயேட்சைக் குழுகளும் உறுப்பினர்களை ஒதுக்குவதற்காகத் தகுதி பெறுவதற்கான குறைந்தபட்சம் மொத்த வாக்குகளில் இருபதில் ஒரு பகுதியையாவது **(5%)** பெற்றிருக்கவில்லை. (தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# ஸ்டீபன் ஹாக்கிங் (STEPHEN HAWKING)



ஐன்ஸ்டீனுக்கு அடுத்து உலகில் தலைசிறந்த பௌதிகவியலாளராக போற்றப்படுபவர் இவராவார். இவர் 1942 தை மாதம் 8 ஆம் திகதி பிரிட்டனின் ஒக்ஸ்போட் நகரில் பிறந்தார். இவர் கலிலியோகலிலி மறைந்து சரியாக 300 ஆண்டுகளின் பின் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹாக்கிங்கின் தந்தை பிராங் ஒரு மருத்துவர். தாயார் இசபெல் ஒரு தத்துவவியல் பட்டதாரியாவார். வடக்கு லண்டனைச் சேர்ந்த இவர்கள் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்ததால் ஒக்ஸ்போட் நகருக்கு குடிபெயர்ந்தனர்.

தன்னுடைய பள்ளிப்படிப்பை செயினட் அல்பன்சு பள்ளியில் படித்த ஹாக்கிங் படிப்பில் சராசரி மாணவராகவே விளங்கினார். ஹாக்கிங் மருத்துவம் படிக்க வேண்டும் என்பதே அவரது தந்தையின் எண்ணம். ஆனால் கணிதம் படிக்க வேண்டுமென்பதே ஹாக்கிங்கின் விருப்பம். ஆனால் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கணிதம் படிக்க முடியாததால் பௌதிகவியலில் சேர்ந்தார். அங்கு பௌதிகவியலில் இளங்கலை பட்டத்தையும் முடித்தார்.

ஒக்ஸ்போட்டில் அண்டவியல் சம்பந்தமான ஆராய்ச்சிகள் எதுவும் இல்லாதபடியினால்' 1962 ஆம் ஆண்டு தனது முதுகலை பட்டத்திற்காக கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கணித பயன்பாடு மற்றும் கோட்பாட்டு பௌதிகவியல் துறையில் சேர்ந்தார். அண்டவியலுக்கான ஆராய்ச்சிகளையும் அங்குதான் மேற்கொண்டார். ஆல்பேட் ஐன்ஸ்டீன் பொது இயக்கவியலுக்கும் அண்டவியலுக்குமான தொடர்பையும் ஹாக்கிங் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த நிலையில் தான் அம்யோடுரோபிக் லெட்டரல் ஸ்கெலோசிஸ் எனும் நரம்புக்குறைபாட்டு நோயினால் பாதிக்கப்பட்டார்.

இந்த நோய் உடலின் ஒவ்வொரு உறுப்பையும் அடுத்தடுத்து சிதைத்துவிடும் தன்மை உடையது. மற்றும் இந்நோய் வந்தவர்கள் பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இறந்துவிடுவார்கள். இந்நோய் தாக்கியவர்கள் 10 ஆண்டுகள் 'வரை உயிர் வாழ வெறும் **10%** வாய்ப்பே இருந்தது. ஆனால் ஹாக்கிங்கிக்கு மருத்துவர் கொடுத்த காலம் வெறும் 2 ஆண்டுகள் மட்டுமே. அவரது உடல் உறுப்புக்கள் செயலிழந்து கொண்டிருக்கும் வேளையிலும் தன்னம்பிக்கையுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்.

ஹாக்கிங் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது அவருடைய நண்பருடைய நண்பரின் சகோதரியான ஜான்வைல்ட் உடன் அவருக்கு காதல் ஏற்பட்டது.

ஹாக்கிங் நோயினால் பாதிக்கப்பட்ட பின்னர் 1964 ஒக்டோபரில் இவருக்கு நிச்சயதார்த்தம் நடந்து 1965 ஜூலை 14 ஆம் திகதிதிருமணமும் செய்துகொண்டார். நோயால் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்தில் இருந்த தனக்கு வாழ்வதற்கான ஆசையை ஏற்படுத்தியர் ஜான் வைல்ட் எனக் குறிப்பிட்டிருந்தார்.

1966 ஆம் ஆண்டு கோட்பாட்டு பௌதிகவியலில் கருந்துளை குறித்த ஆராய்ச்சியில் முனைவர் பட்டம் பெற்ற ஹாக்கிங் இந்தப் பிரபஞ்சத்தை முழுமையாக புரிந்துகொள்ள வேண்டும், இது ஏன் இப்படி இருக்கிறது, இது ஏன் நிலைத்து நிற்கின்றது என்பதற்கான பதிலை முன்வைத்தே ஹாக்கிங்கின் அண்டவியலுக்கான ஆராய்ச்சி தொடர்ந்தது.

இந்தப் பிரபஞ்சத்தின் உருவாக்கம் சிறிய துகள்களாலும் அணுக்களாலும் ஆனது என்ற மைய பௌதிகவியலிலும் பொது இயக்கவியல் கோட்பாட்டின் தொடர்பு அண்ட உருவாக்கத்தில் சிறிய துகள்களின் பங்கு குறித்த அவரது ஆராய்ச்சிகள் புகழ்பெற்றவை. இந்தப் பிரபஞ்சத்தின் உருவாக்கம் குறித்த ஆராய்ச்சிக்ளை ஹாக்கிங் கேள்விகளை முனைந்து மேற்கொண்டார். மத்திய ஆபிரிக்காவில் வசிக்கும் போசாங்கோ இன மக்களின் நம்பிக்கையை குறிப்பிட்ட ஹாக்கிங் அதன் அடிப்படையில் சில கேள்விகளை முன்வைத்தார்.

ஆதியில் அந்தகாரமான இருளும் பும்பா என்ற கடவுளும் மட்டுமே இருந்ததாகவும் ஒருநாள் பும்பாவிற்கு ஏற்பட்ட கடுமையான வயிற்று வலியினால் வாந்தி எடுத்தபோது வந்தது தான் சூரியன் என்றும் அதன்பின் தான் பூமி, நிலவு, சில விலங்குகள் போன்றவை உருவாக்கப்பட்டதாகவும் போசாங்கோ மக்கள் நம்பினர். இதிலிருந்து ஹாக்கிங் சில கேள்விகளை முன்வைத்தார்.

நாம் ஏன் இங்கு இருக்கிறோம், நாம் எங்கிருந்து வந்தோம், உண்மையில் பிரபஞ்சத்தின் உருவாக்கம் குறித்த ஆராய்ச்சிகள் வெகுவாக நடத்தப்பட்டே வந்திருக்கின்றது. இந்தப் பிரபஞ்சமும் அண்டமும் நேரமும் நீண்டகாலமாக நிலைத்திருப்பவை அல்ல, நீண்டகாலம் நிலைத்தும் இருக்காது என 1916 இல் ஆல்பெட் ஐன்ஸ்டீன் நிறுவினார். அதன் விளைவாகவே பிரபஞ்சம் விரிவடைதல்கொள்கை உருவானது.



இதனால் பிரபஞ்சம் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றது எனக்கண்டறியப்பட்டது. சூரியன் உருவாகியவுடன் ஏற்பட்ட அதிபயங்கர வெடிப்பினால் வாயுக்கள் உருவாகி அது ஒன்றோடொன்று பிணைந்து இந்தப் பிரபஞ்சம் பூமி முதலானவை உருவாகின. சூரியனின் ஈர்ப்பு விசை காரணமாக அவை சூரியனைச் சுற்றி வலம் வருகின்றது என்பது தான் வெடிப்புக் கொள்கை ஆகும். வெகுகாலமாக கோட்பாடாக இருந்த பெரு வெடிப்புக் கொள்கையை சக அறிவியரலாளரான லோஜன் பென்றோசுடன் இணைந்து ஹாக்கிங் இதனை நிரூபணம் செய்தார்.

கருந்துளை குறித்த ஹாக்கிங்கின் ஆராய்ச்சி பௌதிகவியல் வரலாற்றில் ஒரு மைல்கல் போன்றதாகும். கருந்துளை என்பது மிக வலுவான ஈர்ப்பு சக்தி கொண்ட அண்டவெளி என்றே கருதப்பட்டு வந்தது. அதன் உள்ளே நடக்கும் எதையும் வெளியே இருந்து பார்க்க முடியாது என்பதனாலே அது கருந்துளை என அழைக்கப்பட்டது. கருந்துளைக்குள் செல்லும் மின்காந்த அலைகள், ஒளி உட்பட எதுவும் கருந்துளையின் ஈர்ப்பு விசை காரணமாக வெளியே வராது என்பதே அதற்கு முன் வந்த எல்லா ஆராய்ச்சிகளின் முடிவாக இருந்தது.

கருந்துளைகளின் வழியே சென்றால் இன்னுமொரு பிரபஞ்சத்திற்கு அல்லது பிரபஞ்சத்தின் இன்னுமொரு பகுதிக்குச் செல்லலாம் என்பது அறிவியல் கதைகளின் ஏகோபித்த முடிவாக இருந்தது. ஆனால் ஹாக்கிங் அதனை மாற்றி அமைத்தார். கருந்துளைகளில் இருந்து பாட்டிகல் எனப்படும் துணிக்கை வெளியேறும் என்பதையும் இதன் காரணமாக காலப்போக்கில் கருந்துளைகள் இல்லாமல் போகும் என்றும் 1970 ஆம் ஆண்டு ஹாக்கிங் நிறுவினார். இதனால் இந்த கதிர்வீச்சு ஹாக்கி கதிர்வீச்சு எனவும் அழைக்கப்படுகின்றது.

1971 ஆம் ஆண்டு கருந்துளை குறித்த ஆராய்ச்சிக்காக கிராவிட்டி ரிசேச் பவுண்டேசனின் விருது ஹாக்கிங்கிற்கு வழங்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டு இவரது முதல் புத்தகமான **The large scale structure of space-time** என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இதனை ஜாக் எல்லிசுடன் இணைந்து ஹாக்கிங் எழுதியிருந்தார்.

பல்வேறு தளங்களில் சிறந்து விளங்கும் விஞ்ஞானிகளை கௌரவிக்கும் பொருட்டு தொடங்கப்பட்ட பிரிட்டன் றோயல்ஸ் அமைப்பின் உறுப்பினராக 1974 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். சேர் ஐசக் நியூட்டன், ஆல்பட் ஐங்ஸ்டீன் போன்றவர்கள் இந்த அமைப்பில் இருந்தது குறிப்பிடத்தக்கது. உலகின் பெருமைக்குரிய கல்வியியல் பதவியாகக் கருதப்படும் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் லூக்காசியன் பேராசிரியராக 1978 ஆம் ஆண்டு ஹாக்கிங் நியமிக்கப்பட்டார்.

ஹாக்கிங்கின் ஆராய்ச்சிகள் ஒரு பக்கம் தொடர்ந்து கொண்டிருக்க அவரது நோயின் தாக்கமும் அதிகரித்து உடலுறுப்புகள் ஒவ்வொன்றாக செயலிழந்து கொண்டே போனது.

1985 நியூமோனியா காரணமாக ஜெனிவா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது அவருக்கு டிரக்கோசோமி செய்ய வேண்டிய சூழல் ஏற்படவே அவரது பேசும் திறனை முற்றிலும் இழந்தார். இதனை அடுத்து ஸ்பீக் ஜெனரேட்டீங் டிவைஸ் எனப்படும் கருவியின் மூலம் தனது கன்னத் தசைகளின் மூலமாகப் பேசத்தொடங்கினார்.

டைம் டிராவல் எனப்படும் காலங்களைக் கடந்து பயணம் செய்வது குறித்து இவர் ஆராய்ச்சிகளை செய்துள்ளார். ஏரோஸ் ஒப் டைம் தத்துவம் குறித்து 1985 இவர் வெளியிட்ட ஆய்வுக்கட்டுரையில் விரிவடைந்து கொண்டிருக்கும் பிரபஞ்சம் ஒரு கட்டத்தில் சுருங்கத் தொடங்கும் போது காலம் பின்னோக்கி ஓடும் என்றார் ஹாக்கிங்.

இவரது புத்தகங்களான **A brief history of time, black holes and baby universes, The gland design,** மற்றும் ஹாக்கிங்கின் சுயசரிதையான **my brief history** என்பவை பிரசித்தி பெற்றவை. ஸ்டீபன் ஹாக்கிங் பல விருதுகளையும் பதக்கங்களையும் பெற்றிருக்கின்றார். 1966 இல் ஆடம்சு பரிசு, 1975 இல் எடிங்டன் பதக்கம், 1976 இல் மாக்சுவேல் பதக்கமும் பரிசும் யூசு பதக்கம், ஐன்மென் பதக்கம், 1978 இல் ஆல்பர்ட் ஐன்சுடைன் பரிசு, 1985 ஆம் ஆண்டு ரோயல் சொசைட்டியின் அஸ்ரோனமிகல் சொசைட்டியின் தங்கப்பதக்கம், 1987 இல் திராக் பதக்கம், 1988 இல் **the wolf** விருது 2006 இல் கோலிபதக்கம், 2012 இல் அடிப்படை இயல்பியல் பரிசு ஆகியனவையாகும். 1989 இல் பிரிட்டன் மகாராணியால் தஹானர் ஒப் கம்பனியின் விருது வழங்கி ஹாக்கிங் சிறப்பிக்கப்பட்டார்.

1995 சில காரணங்களால் ஜானை விவாகரத்து செய்த ஹாக்கிங் மீண்டும் 2005 இல் ஜானுடன் இணைந்தார். பூமியின் ஆயுள் குறித்தும் மனித சமூகத்தின் இருப்பு குறித்தும் ஹாக்கிங்கின் கருத்து உலகிற்கு இன்றியமையாதவை. இந்த உலகம் இன்னும் 100 ஆண்டுகளுக்கு மேல் தாக்குப்பிடிக்காது எனக்கருதினார். மற்றும் மனித சமூகத்தின் இருப்பிற்காக இந்தக் கிரகத்தை விட்டு இன்னுமொரு கிரகத்திற்கு குடியேற வேண்டும் எனவும் கூறிய ஹார்க்கிங் அதற்கான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வந்தார். இந்தப் பூமியின் அழிவு மனிதனின் செயற்பாடுகளால் தான் நிகழும் எனவும் கூறினார்.

அதிக மக்கள் தொகை, பருவநிலை மாறுபாடு காரணமாக இந்தப் பூமி அழிந்துவிட வாய்ப்பு இருப்பதால் இன்னும் 30 ஆண்டுகளுக்குள் செவ்வாய்க்கிரகத்தையும் நிலவையும் பூமியின் காலனிகளாக மாற்றவில்லை எனின் இந்தப் பிரபஞ்சத்திலிருந்து மனித இனம் துடைத்து எறியப்படும் என ஹாக்கிங் எச்சரித்தார். பௌதிகவியல் துறையில் தன்னுடைய பங்களிப்பை தவறாமல் அளித்த ஹாக்கிங் மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தார். வியட்நாமை அமெரிக்கா ஆக்கிரமித்த போது அங்கு நிகழ்ந்த போரில் மனித உரிமைகள் மீறப்பட்டதை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்தார். வல்லரசுகளின் அத்துமீறல்களையும் எதிர்த்து வந்தார்.

அமெரிக்கா ஈரான் மீது போர் தொடுத்த போது அதனை எதிர்த்து எழும்பிய முக்கியமான குரல்களில் ஹாக்கிங்கின் குரலும் ஒன்று. ஸ்ரேலில் நடத்தப்பட்ட முக்கியமான அறிவியல் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ள அழைப்பு வந்த போது பாலஸ்தீன் மீது ஸ்ரேல் நடத்திய தாக்குதல்களுக்கு எதிர்ப்பும் கண்டனமும் தெரிவிக்கும் விதமாக அழைப்பை நிராகரித்து அந்த மாநாட்டை புறக்கணித்தார். உடலளவில் பலவீனமான மனிதராக வாழ்நாளில் பெரும்பாலான நாட்களை சக்கர நாட்காலியில் கழித்தாலும் அதிகாரத்திற்கு எதிராக பலமுறை ஒலித்திருக்கிறார். 2018 மார்ச் 14 ஆம் திகதி 76 வயதில் காலமானார். வரலாற்றில் ஆகச் சிறந்த விஞ்ஞானிகளாக போற்றப்பட்ட ஐசக் நியூட்டனின் பிறந்த நாளில் பிறந்து ஆல்பேட் ஐங்டீனின் பிறந்தநாளில் மரணமடைந்த ஹாக்கிங், அவர்கள் இருவருக்கும் நிகரான புகழைக் கொண்டவர் என்றால் அது மிகையல்ல.


**செல்வன் சேகர் தனுஸ்ராஜ்
முகிழ்நிலை ஆசிரிய மாணவன்
(விஞ்ஞானம்) யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி.**

# பாரதம்



மக்கள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாமின் பிறந்தநாள் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி அனைத்துத் தரப்பினரும் கலாமின் நினைவுகளைப் பகிர்ந்து அவருக்கு மரியாதை செலுத்தினர். அவரது புகைப்படங்களையும், அவர் மாணவர்களுக்கு கூறிய ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளையும் சமூக வலைத்தளங்கள் வாயிலாக பலரும் பகிர்ந்தனர்.

## கிளிமஞ்சாரோ மலையில் காட்டுத்தீ



(தன்சானியா)

ஆபிரிக்காவின் மிக உயரமான மலையான கிளி மஞ்சாரோவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்புத்துறை தொடர்ந்து ஐந்தாவது நாளாக ஈடுபட்டு வருகிறது.

ஆபிரிக்காவில் தன்சானியா நாட்டிலுள்ள இந்த மலையில் பலத்த காற்று வீசுவதன் காரணமாக பல மைல்கள் தூரத்திற்கு மிக வேகமாக தீ பரவி வருகிறது.

இந்த தீ பறவைகள், பாம்புகள் மற்றும் பல்லிகள் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்கள் வசிக்கும் ஆல் பைன் சுற்றுச்சூழல் மண்டலத்தை அச்சுறுத்துகிறது என்று தன்சானியாவின் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹமிசி கிக்வங்கல்லா நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

வரண்ட சூழ்நிலைகள், பலத்த காற்று மற்றும் நெருப்பின் இருப்பிடம் ஆகிய வற்றைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகளுக்கு இடையூறு விளைவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## மன்னருக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டம்


(பாங்கொக்)

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் அண்மைய நாட்களாக மன்னருக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தாய்லாந்து பிரதமரை பதவியிலிருந்து விலகுமாறு கோரியும் ஜனநாயகத்தை நோக்கிய அரசியலமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் மாணவர்களும் பாரியளவில் போராட்டகாரர்களுடன் இணைந்து பிரதமரின் மாளிகை முன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டு மக்கள் ஒன்று கூடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. (நி-10)

## வறிய நாடுகளுக்கு உதவ மேலும் நிதியுதவி கோரும் உலக வங்கி




(வோஷிங்டன்)


உலகளாவிய கொரோனாத் தொற்று நோயின் பாரிய சவால்களை எதிர்கொள்ள உலகின் ஏழ்மையான நாடுகளுக்கு உதவ உலக வங்கி COVId-19 அவசர நிதியுதவிக்கு மேலும் 25 பில்லியன் டொலர் நிதியைக் கோருவதாக உலக வங்கியின் தலைவர் டேவிட் மால்பாஸ் தெரிவித்தார்.

உலகின் மிக வறிய நாடுகளுக்கு உதவும் உலக வங்கிக் குழுவான சர்வதேச மேம்பாட்டுக் கழகத்தின் பிரதிநிதிகளுக்கு இந்த மாத இறுதியில் துணை நிதிதொகுப்பை முன்மொழியப்போவதாக ஜி-20 முக்கிய பொருளாதாரங்களின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களிடம் நேற்று முன்தினம் டேவிட் மால் பாஸ் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று நெருக்கடி காரணமாக குறைந்த வருமானம் கொண்ட நாடுகளிடையே "ஒழுங்கற்ற இயல்பு நிலைகள்" அதிகரிக்கும் அபாயம் குறித்து அடிக்கோடிட்டுக் காட்டினார்,

இதேவேளை, வறிய நாடுகளுக்கு உதவுவதற்காக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஒரு கூட்டு நடவடிக்கை திட்டத்தை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## விண்வெளி ஆய்வு மையத்திற்கு விண்வெளி வீரர்கள் பயணம்



(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவைசேர்ந்த 3 விண்வெளி வீரர்கள் ரஷ்யாவின் புதிய விண்கலத்தில் நேற்று முன்தினம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் இணைந்து, விண்ணில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்துள்ளன. இங்கு அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் சுழற்சி முறையில் தங்கி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவைச் சேர்ந்த கேத்லீன் ரூபின்ஸ், ரஷ்யாவின் ரோஸ்கோஸ்மோஸ் விண்வெளி நிறுவனத்தைச் சேர்ந்த செர்ஜி ரைஜிகோவ் மற்றும் செர்ஜி குட்ஸ்வெர் கோவ் ஆகிய 3 விண்வெளி வீரர்கள் நேற்று சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கசகஸ்தானில் ரஷ்யாவால் இயக்கப்படும் பைகோனூர் ஏவுதளத்தில் இருந்து ரஷ்யாவின் புதிய சோயுஸ் எம்.எஸ்.17 விண்கலத்தில் அமெரிக்கா மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர்கள் விண்வெளிக்கு புறப்பட்டுச் சென்றனர்.

இதனிடையே ரஷ்யாவின் இந்த புதிய விண்கலம் இதுவரை இல்லாத வகையில் பூமியில் இருந்து புறப்பட்ட 3 மணி நேரத்துக்குள் விண்வெளி வீரர்களை விண்ணில் கொண்டு சேர்த்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு சென்றுள்ள இந்த 3 விண்வெளி வீரர்களும் 6 மாத காலத்துக்கு அங்கு தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்வார்கள் என நாசா தெரிவித்துள்ளது. (நி)

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு சர்வாதிகார நாடுகள் தெரிவு

### அமெரிக்கா கண்டனம்




(வோஷிங்டன்)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் கியூபா போன்ற சர்வாதிகார நாடுகளைத்தேர்ந்து எடுத்ததற்காக அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பொம்பியோ இந்த விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

மேலும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இருந்து விலகுவதற்கு அமெரிக்கா எடுத்த முடிவு சரியென்பதை இந் நிகழ்வு உறுதிப்படுத்தியுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைக பேரவையில் உறுப்பு நா களைத் தெரிவு செய்யும் வா கெடுப்பு நேற்று முன்தின நடைபெற்றது.

இதில், பாகிஸ்தான் மற்று நேபாளம் ஆகிய நாடுகள் மீள டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டன் 139 வாக்குகளைப் பெற் சீனாவும் தெரிவானது.

அத்துடன், 2016 ஆ ஆண்டில் இரண்டு வாக்குக வித்தியாசத்தில் தோற்கடி கப்பட்ட ரஷ்யா, இம்முறை 15 வாக்குகளைப் பெற்று மீண் தெரிவு செய்யப்பட்டுள்ள குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு

## கொரோனா வைரஸிற்கான இரண்டாவது தடுப்பூசியையும் உருவாக்கி விட்டோம்- புடின் அதிரடி அறிவிப்பு



**(மொஸ்கோ)**

**கொரோனா வைரஸிற்கு எதிராக 3 ஆவது தடுப்பூசியையும் கூடிய விரைவில் உருவாக்கி விடுவோம் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.**

உலகம் முழுவதையும் அச்சுறுத்தி வரும் கொரோனாவுக்கு எதிராக பல்வேறு உலக நாடுகள் தடுப்பூசிகளை உருவாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இதில் பல நாடுகள் கணிசமான வெற்றியையும் பெற்று தடுப்பூசி தயாரிப்பின் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

இதற்கிடையில், கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி உலகிலேயே முதல் கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கி, பதிவு செய்து விட்டதாக ரஷ்யா ஜனாதிபதி புடின் அதிரடியாக அறிவித்தார்.

'ஸ்புட்னிக் 5' என பெயரிடப்பட்டுள்ள அந்த தடுப்பூசி தற்போது ரஷ்யாவில் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்தியா உட்பட பல்வேறு நாடுகளும் இந்த 'ஸ்புட்னிக் 5' தடுப்பூசியை பரிசோதனை செய்து வருகிறது.

இந்நிலையில், கொரோனா வைரஸிற்கு எதிராக இரண்டாவது தடுப்பூசியையும் உருவாக்கிவிட்டதாக ரஷ்ய ஜனாதிபதி அதிரடியாக தெரிவித்துள்ளார்.

எபிவேக் கொரோனா என பெயரிடப்பட்டுள்ள இந்தத் தடுப்பூசி சைபீரியாவில் உள்ள வெக்டர் இன்ஸ்டிடியூட் என்ற மருந்து நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசி தற்போது அதிகாரபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், இந்தத் தடுப்பூசியின் மூன்றாம் கட்ட பரிசோதனைகள் இன்னும் தொடங்கவில்லை. மேலும், முதல் மற்றும் இரண்டாம் கட்ட பரிசோதனைகள் நிறைவடைந்த போதும் அதன் முடிவுகள் வெளியிடப்படவில்லை.

இந்தத் தடுப்பூசியின் 3 ஆம் கட்ட பரிசோதனை நவம்பர் மாதம் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசோதனையில் 40 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு பரிசோதனை நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி அதிகாரபூர்வமாக பதிவு செய்யப்பட்டு விட்டதால் 3 ஆம் கட்ட பரிசோதனை முழுமையடைவதற்கு முன்னதாகவே எபிவேக் கொரோனா மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில், இந்தத் தடுப்பூசி அதிகாரபூர்வமாக பதிவு செய்யப்பட்டது தொடர்பான அறிவிப்பை வெளியிட்ட ரஷ்ய ஜனாதிபதி புடின், செயின் பீட்டர்ஸ்பர்கை சேர்ந்த சுவ்மகோவ் நிறுவனத்தின் மேலும் ஒரு தடுப்பூசி இறுதிக்கட்ட பரிசோதனையில் உள்ள தாகவும், கூடிய விரைவில் கொரோனாவுக்கான 3 ஆவது தடுப்பூசியும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்தார்.

'ஸ்புட்னிக் 5' தடுப்பூசியைத் தொடர்ந்து மேலும் ஒரு கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கிவிட்டதாகவும் 3 ஆவது தடுப்பூசியை விரைவில் உருவாக்கி விடுமோம் என ரஷ்யா அதிரடியாகத் தெரிவித்துள்ள நிகழ்வு உலக நாடுகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

## கொரோனாவால் காது கேட்கும் திறன் இழக்கும் இங்கிலாந்து விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவல்

(லண்டன்)


கொரோனாத் தாக்கினால் சிலருக்கு காது கேட்கும் திறன் நிரந்தரமாக போய் விடுவதற்கு வாய்ப்பு உள்ளது என இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் நுரையீரல், சிறுநீரகம், இதயம் உள்ளிட்ட உறுப்புகள் பாதிக்கும், ஆண் செக்ஸ் ஹார்மோன் டெஸ்டோஸ்டிரான் உற்பத்தி பாதிக்கும் என கண்டறியப்பட்டிருந்தது.

இந்த வரிசையில் இப்போது கொரோனா தாக்கினால் சிலருக்கு காது கேட்கும் திறன் நிரந்தரமாக போய் விடுவதற்கு வாய்ப்பு உள்ளது என இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

லண்டன் பல்லைக்கழக கல்லூரியின் விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் நடத்திய ஆய்வில், கொரோனா வைரஸால் ஏற்படுகிற பக்க விளைவு, செவித்திறன் இழப்பு என்றும், அதேநேரத்தில் உடனடியாக சரியான ஸ்டீராய்டு சிகிச்சை எடுக்கிறபோது, மீண்டும் கேட்கும் திறனை மீட்டெடுக்க முடியும் என்றும் தெரிய வந்துள்ளது.

'பி.எம்.ஜே. கேஸ் ரிப்போர்ட்ஸ்' பத்திரிகையில் இந்த ஆய்வு முடிவு வெளியாகி உள்ளது. வைரஸால் ஏற்படுகிற அழற்சியும், உடலில் இரசாயனங்கள் அதிகரிப்பும் காது கேட்காமல் செய்து விடுகிறது என ஆய்வின் முடிவில் தெரிவித்தனர். (நி)






## மாதந்தோறும் 1 1/2 கோடி தடுப்பூசி தயாரிக்க ரஷ்யா தீர்மானம்

(மொஸ்கோ)

வசந்த காலத்தில் தடுப்பூசி தயாரிப்பை மாதந்தோறும் 1 1/2 கோடி 'டோஸ்' அளவுக்கு அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றை தடுத்து நிறுத்துவதற்காக 'ஸ்புட்னிக்-வி' என்ற தடுப்பூசியை ரஷ்யா உருவாக்கி, அதன் இறுதிக்கட்ட மருத்துவ பரிசோதனையை நடத்தி வருகிறது.

இந்த தடுப்பூசியை நவம்பர் மாதம் 8 இலட்சம் 'டோஸ்', டிசெம்பர் மாதம் 15 இலட்சம் 'டோஸ்', ஜனவரியில் 30-35 இலட்சம் 'டோஸ்' தயாரிக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது. (நி)

# பி.சி.ஆர். பரிசோதனையின் போது வலி ஏற்படாது-வைத்தியர் விளக்கம்

**(கொழும்பு)**

**பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொள்ளும்போது அதிக வேதனையளிக்கும் என தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பொய்யானவை என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.**




சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகில் பல மில்லியன் பேர் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது வேதனைக்குரிய விடயம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சரியாக அறிந்துகொள்ள தானும் பி.சி.ஆர்.பரிசோதனை செய்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறிய அளவில் அசௌகரியம் ஏற்பட்டாலும் அது பயப்பட வேண்டிய விடயம் ஒன்று இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-7)

# விவசாயிகளுக்கு அதிக லாபம் நுகர்வோருக்கு நிவாரண விலை இரண்டும் கிடைக்கக் கூடிய சந்தை விரைவில்

(கொழும்பு)

விவசாயிகளுக்கு அதிக லாபமும் நுகர்வோருக்கு நிவாரண விலையிலும் பொருட்கள் கிடைக்கப்பெறும் வகையில் சந்தையொன்று உருவாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து பகுதிகளிலுமுள்ள விவசாயிகள் இடைத்தரகர்கள் இன்றி தமது பொருட்களை விற்பனை செய்யும் நிலைமையை ஏற்படுத்துவதன் ஊடாக இதனை சாத்தியப்படுத்த முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

வாழ்க் கைச்செலவு குழு நேற்று முன் தினம் கூடிய போதே இத னைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அத்தியாவசியப் பொருட்களை பற்றாக்குறையின்றி மக்களிடம் சேர்ப்பது குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 50 ஆயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பில் புதிதாக தெங்கு செய்கையை ஆரம்பிக்க வேண்டுமென ஜனாதிபதி பணித்துள்ளார்.

பழங்கள்,மரக்கறி வகைகள் மற்றும் முட்டை ஆகியவற்றை நுகர்வோர் தேவைக்கு ஏற்ப பிரதேச மட்டத்தில் பெற்றுக் கொள்வதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக இதன் போது ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறைந்த வருமானம்பெறும் குடும்பங்களை கட்டியெழுப்பும் வகையில் வீட்டுத்தோட்டம் மற்றும் கோழிவளர்ப்பினை ஊக்குவிப்பதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் எதிர்காலத்தில் நெல்கொள் வனவினை மேற்கொள்வதற்கான திட்டங்களை தயாரிப்ப தன் அவசியத்தை இதன் போது ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (நி-7)

# தொற்றாளர்கள் பயணித்த ஆறு பேருந்துகள் அடையாளம் காணப்பட்டன

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று உறுதியானவர்கள் பயணித்த ஆறு பேருந்துகள் அடையாளம் காணப்பட்டு அது குறித்த விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது போக்குவரத்து அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் ND-4890 கொழும்பு - மெதகம பேருந்து. ND 2350, மாகும்புர - காலி பேருந்து. ND 0549 கடவத்த - அம்பலாங்கொட பேருந்து, ND 6503 கொழும்பு - யாழ்ப்பாணம் பேருந்து. ND 9788 எல்பிட்டிய - கொழும்பு பேருந்து மற்றும் NF 7515 காலி - கடவத்த பேருந்து போன்றவை இனங் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அதிசொகுசு பேருந்துகளினுள் பயணிகளை ஏற்றும் போது அவர்களுடைய உடல் வெப்ப நிலையைப் பரிசோதிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பேருந்துகளில் பயணிப்பவர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# கைக்குண்டுடன் கைது

(அவிசாவளை)

அவிசாவளை - மானியங்கம பகுதியில் கைக்குண்டொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் தம்பதியினரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த உந்துருளி ஒன்றை சோதனைக்கு உட்படுத்தியபோதே குறித்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை பகுதியில் வசித்து வரும் 38 மற்றும் 28 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆயுள் அதிகமாக

இந்தியாவிலே ஒரு மனிதனுடைய சராசரி ஆயுள் காலம் ஆணுக்கு 67 பெண்ணுக்கு 70. அது சரி...இதிலே ஏன் இந்த மூன்று ஆண்கள் வித்தியாசம்? ஆண்களின் ஆயுள் காலம் பெண்களைவிட மூன்று வருடங்கள் குறைவாக இருப்பதற்கு என்ன காரணம்?

ஒரு இதய நோய் சிகிச்சை நிபுணர் என்ன சொல்கின்றார் என்றால்... ஆண்களிலே பலபேர் பீடி.. சிகரெட் குடிக்கிறார்கள்... அது தான் காரணம் என்கின்றார்.

மனிதனின் ஆயுள் என்கின்றோம் மனிதனின் வாழ்நாள் என்கின்றோம் இது இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு.

நோய் நொடி எதுவும் வராமல் இருந்தால் மனிதன் 80 வயதிற்கும் மேல் நல்லபடியாக வாழலாம்.

இது மனிதனுடைய வாழ்நாள்.

ஆனால் மனிதனுடைய ஆயுள் என்பது பரம்பரையைப் பொறுத்த விடயம்...மரபு அணுக்களைப் பொறுத்த விடயம்.

இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்...

இந்த உலகத்திலே இருக்கின்றவர்கள்.இன்னும் ஒரு 10,15 வருடம் கூடுதலாக இங்கே வாழவேண்டும் என்றால் அதற்கு ஏதாவது வழி உண்டா?

நவீன மருத்துவ ஆய்வுகள் அதற்கு 10 வழிகளைச் சொல்லியிருக்கின்றது. அது என்ன என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

முதலிலே ஒரு நாளைக்கு ஒருவேளை உணவை முழுமையாக மனநிறைவோடு சாப்பிடுங்கள்.

இரண்டாவது தினமும் ஒரே மாதிரியான உணவு வேண்டாம். நாளுக்கு நாள் சாப்பாடு வித்தியாசமாக இருக்கின்றது நல்லது.தினமும் பழம்– காய்கறிகள் அதிகமாக சாப்பிட வேண்டும்.

மூன்றாவது கருத்து வாரத்திற்கு இரண்டு தடவையாவது மீன் மாதிரியான கடல் உணவு நல்லதாம்.சைவ உணவுக்காரர்கள் இதைக் காதிலே வாங்கிக் கொள்ள வேண்டாம். நான்காவது கருத்து மது அருந்த வேண் டாம். ஐந்தாவது கருத்து தினமும் ஒரு வேளையாவது பால் சாப்பிடுங்கள்.ஆறாவது கருத்து என்னவென்றால் .. உடல் எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கின்ற மாதிரி... ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண்டும்.. சும்மா சோர்ந்து போய் ஒரு மூலையிலே உட்கார்ந்துவிடக் கூடாது.. உடற் பயிற்சி நல்லது.

ஏழாவது கருத்து தாகம் எடுக்கின்ற அளவுக்கு கடுமையான உடற்பயிற்சி வேண்டாம்.எட்டாவது கருத்து உணவில் அதிகமாக மாமிசக் கொழுப்புச் சத்து சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒன்பதாவது கருத்து வாரத்திற்கு 2 அல்லது 3 தடவைக்கு மேலே அசைவம் சாப்பிட வேண்டாம்.

பத்தாவது கருத்து உடல் எடை அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கோபம் மாதிரியான உணர்ச்சிகளுக்கு அடிக்கடி இடம் கொடுக்க வேண்டாம். இந்தப் பத்துக் கருத்துக்களும்... மருத்துவ ஆராய்ச்சி மூலமாக கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருத்துக்கள். அதனாலே இதை மனதிலே வைத்துக் கொண்டு அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொண்டால் வழக்கத்தை விட அதிகமாக ஒரு 10,15 ஆண்டுகள் இந்த உலகத்திலே வாழ முடியும் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள். எங்களில் பல பேருக்கு இந்த உலகத்திலே அதிக நாள் வாழவேண்டும் என்பதைவிட அதிக நாள் இளமையாக இருக்க வேண்டும் என்பதில் தான் ஆசை! இரண்டு வயதானவர்கள் பேசிக் கொண்டிருப்பார்கள்.

வயது ஆக ஆக உடம்பிலே பலம் குறைந்து போய் விடுகின்றது சேர். அது தான் கவலையாக இருக்கின்றது என்றார் ஒருத்தர்.

இன்னொரு வயதானவர் சொன்னார்.எனக்கு அப்படி இல்லை சேர். சின்ன வயதிலே எனக்கு என்ன பலமோ அதே அளவு பலம் தான் இப்பொழுதும் இருக்கின்றது. என்றார். அது எப்படி? என்று ஆச்சரியமாக கேட்டார் அவர்.அதற்கு இவர் பதில் சொன்னார்.

எங்கள் வீட்டிலே ஒரு பெரிய அம்மிக்கல்லு உண்டு சேர். சின்ன வயதிலே என்னால் அதைக் கொஞ்சம் கூட அசைக்க முடியாது.இப்பொழுதும் என்னால் அதைக் கொஞ்சம் கூட அசைக்க முடியவில்லை சேர் என்றார்.

# கல்விக் கட்டமைப்பு மறுசீரமைப்பு; கல்வி அமைச்சர்-பேராயர் சந்திப்பு

(கொழும்பு)

கல்விக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்புகள் தொடர்பில், கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸிற்கும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்குமிடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.

கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸின் வழிகாட்டலின் கீழ், எதிர்காலத்தில் கல்விக் கட்டமைப்பில் முன்னெடுக்கப்படவுள்ள மறுசீரமைப்புகளுக்கு கிறிஸ்தவ தேவாலயங்கள் உட்பட அனைத்து கிறிஸ்தவ மக்களினதும் முழுமையான ஆதரவைப் பெற்றுத் தருவதாக இந்தச் சந்திப்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உறுதியளித்தார்.

மதசார் நிறுவனங்கள் மற்றும் கல்விக் கட்டமைப்புக்கிடையில் தொடர்புகள் காணப்படுவது அத்தியாவசியமாகுமென்றும் கல்வி அமைச்சரிடம் இச்சந்திப்பில் பேராயர் சுட்டிக்காட்டினார். (நி-7)

# கொரோனா சிகிச்சைக்காக மேலும் 10 வைத்தியசாலைகள்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்காக, மேலதிகமாக 10 வைத்தியசாலைகளை தயார்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை 14 வைத்தியசாலைகளில் 2,400 கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக 10 வைத்தியசாலைகளைத் தயார்படுத்தியுள்ளதாகவும் அமைச்சின் ஊடகப்பேச்சாளர், டாக்டர் ஜயருவன் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், மினுவாங்கொட கொரோனாத் கொத்தணியில் அடையாளம் காணப்பட்ட நோயாளர்களில் எவரும் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-6)

## பணிப்பகிஷ்கரிப்புக்கு தயாராகும் தனியார் பேருந்துகள்

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைகள் நிறைவுற்றதும், நாடு பூராகவும் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அதற்கமைய அடுத்த மாதம் 9 ஆம்திகதியிலிருந்து அனைத்து தனியார் பேருந்துகளும் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றால் தனியார் பேருந்துத்துறையைச் சேர்ந்தவர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு எந்தவொரு அதிகாரியாலும் தீர்வு கிடைக்காமையால் இந்த முடிவுக்கு வந்ததாக, அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# அத்தியாவசியப் பொருட்களை வீடுகளுக்கு விநியோகிக்கத்திட்டம்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை அவர்களின் வீடுகளுக்கு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் அப்பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களை சுகாதார வழிகாட்டல்களின் கீழ் மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், நடமாடும் சேவைகள் மூலம் பொருட்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சதொச உள்ளிட்ட நிலையங்கள் திறக்கப்படாதமையால், அப்பகுதியிலுள்ள மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றமை குறித்து பதிவாகியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

இதனால் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய வர்த்தக நிலையங்களை திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். எனினும், சில பகுதிகளில் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களைத் திறக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-6)

## ஊரடங்கை மீறிய 142 பேர் கைது

(கொழும்பு)

கம்பஹாவில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 142 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த நான்காம் திகதி முதல் நேற்று வியாழக்கிழமை காலை ஆறு மணிவரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஜ-4)

## 2 ஆசிரியர்களும் 28 மாணவர்களும் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)


கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள பாடசாலை ஒன்றில் 28 மாணவர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் பாடசாலைக்குள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பாடசாலையை நடத்தியமை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக மக்கள் ஒன்றுகூடுவதைத் தடை செய்துள்ள நிலையில், இந்தப் பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முப்படையினர் நடத்தி வரும் 88 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 9 ஆயிரத்து 703 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

## பேருந்து மீது தாக்குதல்!



(திருமலை)

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி அரச அதிகாரிகளை ஏற்றிவந்த பேருந்து மீது மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த குறித்த பேருந்தின் மீது நேற்று முன்தினம் இரவு இவ்வாறு கல்வீச்சு இடம்பெற்றது. (ஜ-4)

# இலங்கைக்கு இரண்டாம் இடம்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணம் செல்ல சிறந்த நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு இரண்டாவது இடம் கிடைக்கப்பெற்றுள்ளது.

"Conde Nast Traveler" என்ற சுற்றுலாத் துறை தொடர்பில் தகவல்களை வெளியிடும் இதழ் இதனை வெளியிட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட குறித்த பத்திரிகையின் வாசகர்களினால் தெரிவு செய்யப்படும் "Reader's Choice Awards" இல் இலங்கைக்கு 93.96 புள்ளிகள் கிடைக்கப் பெற்ற நிலையில் இதில் முதலாவது இடத்தை இத்தாலி 94.05 புள்ளிகள் பெற்றுள்ளது.

இலங்கையின் கலாசாரம், தேயிலைத் தோட்டம் மற்றும் காதலர் கடற்கரை ஆகியன குறித்த இதழில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்த்துக்கல், ஜப்பான், கிரீஸ், தாய்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் வாசகர்களின் விருப்பத்தின் படி முறையே அடுத்த இடங்களை பிடித்துள்ளன. (ஜ-4)

# 25 வெகுஜன ஊடக பாடசாலைகளை ஆரம்பிக்க திட்டம்

(கொழும்பு)

மாணவர்களின் ஊடகத் துறைக் கல்வியை மேம்படுத்துவதற்காக மாவட்டங்களை கேந்திரமாகக் கொண்டு 25 வெகுஜன ஊடக பாடசாலைகள் நாடு முழுவதிலும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாக வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் திருமதி. சாரா ஹல்டன் (Sarah Hulton) மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது வெகுஜன ஊடகத்துறை குறித்த விடயங்கள் தொடர்பில் அமைச்சர் தலைமையிலான குழுவினர் இவருடன் விரிவாக கலந்துரையாடினர்.

பாடசாலைக் கல்வியின் போது மாணவர்களுக்கு வெகுஜன ஊடகம்தொடர்பான தெளிவு மற்றும் ஊடக நெறிமுறைகள் தொடர்பாக உரிய கல்வியை வழங்க வேண்டும் என்றும் இதற்காக மாவட்ட மட்டத்தில் ஊடக பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்படுவதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.



இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வடக்கை கேந்திரமாகக் கொண்டு யாழ்.மாவட்டத்தில் மாணவர்களுக்கு ஊடகக் கல்வி அறிவை மேம்படுத்துவதை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் இதற்கமைவாக இந்த வேலைத்திட்டம் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தகவல்களை வழங்கும் பொறிமுது சரியான வகையிலும் துரிதமாகவும் வழங்குவதற்காக அரசாங்க தகவல் திணைக்களம் குறுஞ்செய்தி சேவையைப் போன்று சமூக ஊடகங்கள் ஊடாக செய்திகளை வழங்கும் புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஜ-4)

# கடல் புறா

## அபாய அறிவிப்பு!




உட்காரச் சொல்லும் இடங்களில் உட்காரும். மறையச் சொன்னால் மறையும். வேவும் பார்க்கும்".

அரசகுமாரி வியப்பு மிதமிஞ்சியது. "வேவு பார்க்குமா!" என்று கேட்டாள் அவள் வியப்புக் குரலிலும் ஒலிக்க.

"பார்க்கும்"

"பார்த்து எப்படி வந்து சொல்லும்?"

"எதிரிகள் நடமாட்டம் சமீபத்தில் இருந்தால் சிறகைப் பலமுறை அடித்துக் கொள்ளும். நின்ற இடத்தில் நிற்காது. அங்கும் இங்கும் தத்தி அவஸ்தைப்படும். நாம் செயலற்று இருந்தால் கையை அலகால் கொத்திக் காயப்படுத்தவும் செய்யும்.

"புகாரின் யவனர்கள் இப்படியெல்லாம் இப்புறாக்களைப் பழக்குகிறார்கள்".

ஆச்சரியத்துக்குள்ளான அரசகுமாரி அதற்கு மேல் ஏதும் சந்தேகம் கேட்காமல் "வருகிறேன் இளைய பல்லவரே! இரவில் ஏதாவது அபாயம் நேர்ந்தால் புறாவை அனுபபுகிறேன்" என்று சொல்லி நகைத்து விட்டுச் செல்லத் தொடங்கினாள்.

"நீங்கள் அனுப்பத் தேவையில்லை. அதுவே இந்த அறைக்கு வரும்" என்று கூறிய கருணாகர பல்லவன் அரசகுமாரி கண்ணுக்கு மறைந்தவுடன் அறைக்குள் திரும்பி மேலங்கி முதலியவற்றை களைந்து பஞ்சணையில் படுத்தான். இலவம் பஞ்சாலும் சீனத்துப் பட்டாலும் தயாரிக்கப்பட்ட அந்தப் பஞ்சணை மிக மெதுவாக இருந்தாலும் கலிங்கத்தில் பெரும் காலடி வைத்த விநாடி முதல் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் உள்ளத்தில் பெரும் அலைகளாக எழுந்து மோதிக் கொண்டிருந்ததால் உறக்கம் பிடிக்காமலே நீண்ட நேரம் படுத்துக் கிடந்தான் அந்த வாலிபன். ஸ்ரீவிஜய சாம்ராச்சியத்தின் சரித்திரமும் காஞ்சனாதேவியின் இணையற்ற அழகும் திரும்பத் திரும்ப அவன் மனக்கண்களுக்கு முன்னால் எழுந்து உலாவின.

தன்னால் முடியுமானால் அவசியம் ஜெயவர் மனைக் கொன்று ஸ்ரீவிஜயத்தில் குணவர்மனுக்கு முடி சூட்டுவதென்ற முடிவுக்கு வந்த இளைய பல்லவன், தன் சொற்பனத்தை எண்ணித் தானே நகைத்துக் கொண்டான். ஸ்ரீவிஜயம் எங்கே, நான் எங்கே? ஸ்ரீவிஜயத்துக்குச் செல்லப் பெரும் கடற்படை வேண்டும்.

கடற்படை இருந்தாலும் அதைச் செலுத்தத் திறன் வேண்டாமா? மரக்கலம் செலுத்தியே பழக்கமில்லை எனக்கு. மனக்கோட்டை மட்டும் பலமாயிருக்கிறது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு 'சரி, சற்று நிம்மதியாக உறங்குவோம்' என்று கண்களை மூடினான்.

ஆனால் அன்றிரவு அத்தனை சுலபத்தில் அவனுக்கு நிம்மதிய ளிப்பதாகக் காணோம். சுமார் அடுத்த அரை ஜாமம்தான் அவன் படுத்திருந்தான். திடீரென வீதியில் தடதடவெனப் புரவிகள் வரும் சத்தம் கேட்கவே சட்டென்று எழுந்து சாளரத்துக்கு வெளியே தலையை நீட்டிப் பார்த்தான். சுமார் நான்கு புரவிகள் எதிரேயிருந்த மாளிகைத் தாழ்வாரத்து வெளிக்கூரையின் இருட்டித்த இடத்தில் நகர்ந்து நின்றன. அந்தப் புரவிகளில் ஒன்றிலிருந்து குதித்த போர்க் கவசமணிந்த வீரனொருவன் வீதியில் இருமுறை அங்குமிங்கும் உலாவினான்.

பிறகு திடீரென்று குறுக்கே நடந்து மாளிகையின் கீழ்க்கதவை லேசாக மும்முறை தட்டவும் செய்தான். அவன் தட்டுவதற்கும் இரண்டறைகளுக்கு அப்பாலிருந்த தன் பள்ளி அறையிலிருந்து காஞ்சனாதேவி ஓடி வருவதற்கும் சரியாயிருந்ததைக் கவனித்தான் இளைய பல்லவன். அது மட்டுமல்ல, காஞ்சனாதேவிக்கு இளைய பல்லவன் அது மட்டுமல்ல, காஞ்சனாதேவிக்கு முன்பாக பறவைத் தீவின் அந்தப் பெரும் புறா சிறகடித்துப் பறந்து வந்து அவன் மார் மேல் உட்கார்ந்து அவன் மார்பை மும்முறை அலகால் குத்தவும் செய்தது.

அந்தப் புறாவைத் துரத்தி வந்த காஞ்சனாதேவியின் கண்கள் அச்சத்துடன் எழுந்து கரணாகர பல்லவனின் கண்களுடன் கலந்தன.

"ஆம், தேவி, ஏதோ அபாயம் தான் வந்திருக்கிறது. இதைப் பிடியுங்கள்" என்று புறாவைப் பிடித்து அவளிடம் கொடுத்த இளைய பல்லவன் தன் மேலங்கியை மிகத் துரிதமாக அணிந்து இடையில் வாளையும் எடுத்துக் கட்டிக் கொண்டு திடுதிடுவென்று அறைக்கு வெளியே நின்றான்.

"சற்று நிதானியுங்கள். தந்தையை எழுப்புகிறேன்" என்று தடுத்தாள் காஞ்சனாதேவி.

"யாரையும் எழுப்ப வேண்டாம். நீங்கள் அறைக்குச் சென்று தாழிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள். என் குரலோ உங்கள் தந்தை குரலோ கேட்டாலொழியக் கதவைத் திறக்க வேண்டாம்" என்று எச்சரிக்கை செய்த கருணாகர பல்லவன் கண வேகமாகப் படிகளில் இறங்கிக் கீழ்த்தளத்துக்குச் சென்றான்.

அவன் கீழ்த்தளத்தின் வாயிற்படியை அடைவதற்கும் கவசமணிந்த வீரன் உள்ளே நுழைவதற்கும் சரியாயிருந்தது. அந்த இரவில் மென்மேலும் பல விந்தைகள் காத்திருந்தன இளைய பல்லவனுக்கு. எதிரே வெகு வேகமாகப் படிகளில் இறங்கி வந்த இளைய பல்லவனைக் கண்டதும் கவசமணிந்த வீரன் தலை தாழ்த்தி வணங்கினான். எதிரி எதற்காகத் தலை வணங்குகிறான் என்பதை எண்ணிப் பார்த்து ஏதும் புரியாமல் வியப்பில் ஆழ்ந்த இளைய பல்லவனை வந்த வீரனின் பேச்சு இன்னும் அதிக ஆச்சரியத்தில் அமிழ்த்தியது.

"இந்த மாளிகையில் கருணாகர பல்லவர் தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டோம்..." என்று துவங்கினான் வீரன்.

கருணாகர பல்லவன் அந்த வீரனைக் கூர்ந்து நோக்கி "யார் நீங்கள்?" என்று கேட்டான், சந்தேகம் தொனித்த குரலில்.

"கருணாகர பல்லவரின் நண்பரொருவர் அனுப்பினார்" என்று பதில் கூறினான் அந்த வீரன். "யாரந்த நண்பர்?"

"அதைக் கருணாகர பல்லவரிடம்தான் சொல்ல முடியும். மற்றவர்களிடம் சொல்ல உத்தரவில்லை" திட்டமாக அறிவித்தான் அந்த வீரன்.

"நான்தான் இளையபல்லவன்."

"அடையாளம்?"

"இதோ பார்" இடது கையிலிருந்த முத்திரை மோதிரத்தைக் காட்டினான் இளைய பல்லவன்.

அதைக் கவனித்ததும் மீண்டுமொருமுறை தலை வணங்கிய அந்த வீரன், "தாங்கள் என்னை நம்பி என்னுடன் வர இதைக் காட்ட உத்தரவாயிருக்கிறது." என்று கூறி, தன் கச்சையிலிருந்து மற்றொரு மோதிரத்தை எடுத்துப் பதிலுக்குக் காட்டினான்.

அந்த மோதிரத்தைக் கையில் வாங்கிய கருணாகர பல்லவனின் கண்களில் வியப்பின் எல்லை தெரிந்தது. மிகுந்த பயபக்தியுடன் கண்களில் அந்த மோதிரத்தை ஒற்றிக்கொண்டான். அவன் முகத்தில் ஒரு விநாடி குழப்பம் தெரிந்தது. 'புறா பொய் சொல்லுமா? அதன் அபாய அறிவிப்பு பொய்யா? வந்திருப்பவர்கள் நண்பர்களானால் அது ஏன் சிறகடித்து ஓடி வந்தது? என் மார்பை ஏன் குத்தியது?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

மீண்டும் மோதிரத்தை நன்றாக ஆராய்ந்தான். சந்தேகமில்லை. புறா தவறுதான் செய்திருக்கிறது. இந்த முத்திரை மோதிரத்தின் ஆணையை மீற முடியாது. வந்திருப்பவர்கள் விரோதிகளாய் இருக்க முடியாது. நண்பர்களைத் தவிர வேறு யார் இந்த மோதிரத்தைக் கொண்டு வர முடியும்?" என்று தன்னைக் கடைசியில் திடப்படுத்திக் கொண்ட கருணாகர பல்லவன், "இந்த மோதிரத்துக்குடையவர் எங்கிருக்கிறார்?" என்று கேட்டான்.

"பதில் சொல்ல உத்தரவில்லை, இளைய பல்லவரே" என்றான் வீரன்.

கருணாகர பல்லவன் மேற்கொண்டு அவனுடன் விவாதிக்காமல் பணிப்பெண் ஒருத்தியை அழைத்து, "நான் வெளியே செல்கிறேன். சீக்கிரம் திரும்பி விடுவேனென்று உன் தலைவியிடம் சொல்" என்று காஞ்சனாதேவிக்குச் செய்தி அனுப்பிவிட்டு, கவசமணிந்த வீரனை நோக்கி, "சரி, புறப்படுங்கள்" என்று கூறி அவனைத் தொடர்ந்து சென்றான்.

இளைய பல்லவனுடன் வீதிக்கு வந்த அந்த வீரன் எதிர்த்தாழ்வரை நிழலில் மறைந்திருந்த மற்றப் புரவி வீரரை வெளியே வரும்படி அழைத்தான்.


அவர்களிலொருவனது புரவியில் கருணாகர பல்லவரை ஏறச் சொல்லி மற்ற வீரர்கள் பின் தொடரத் தன் புரவியைச் செலுத்தினான்.

(தொடரும்...)

# இலங்கையுடன் பல்வேறு துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பு விரிவாக்கப்படும்

(கொழும்பு)

இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவதன் ஊடாக இலங்கையுடனான நல்லுறவை மேலும் பலப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.



இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) முஹம்மத் சாத் கட்டாக் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது வர்த்தகம், முதலீட்டு வாய்ப்புக்கள், சுற்றுலா, கல்வி, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக பாகிஸ்தானிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த இருதரப்புக் கலந்துரையாடலின் போது அபிவிருத்தி, வர்த்தகம், கல்வி, தொழிற்பயிற்சி, சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கும் ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்கும் தயாராக இருப்பதாக அந்நாட்டு உயர்ஸ்தானிகர் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் உறுதியளித்தார்.

அதுமாத்திரமன்றி இலங்கையுடனான நீண்டகால நட்புறவை பாகிஸ்தான் பெரிதும் மதிப்பதாகக் குறிப்பிட்ட பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர், பல்வேறு துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவதன் ஊடாக இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் பலப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது பற்றி இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கொழும்பில் 61 தொற்றாளர்கள்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாத்திரம் 61 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட அனைத்து நோயாளர்களும் மினுவாங்கொட கொவிட்-19 கொத்தணிப் பரவலுடன் தொடர்புகளை உடையவர்கள் என பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# விடுதிகளிலேயே அதிகமான தொற்று

(கொழும்பு)

நாட்டின் ஏனைய நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளைச் சேர்ந்த ஊழியர்களுடன் பிராண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் ஒரே விடுதியில் தங்கியிருப்பதாலேயே கொரோனா வைரஸ் அதிகமாகப் பரவுகின்றது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

எனவே ஏனைய ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களுடன் தங்கியிருக்கும் தொழிலாளர்கள் மாற்று வழிகள் குறித்து சிந்திக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் பல ஆடைத்தொழிற்சாலைகள் காணப்படுகின்றன என தெரிவித்துள்ள அவர், பல தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒரே விடுதியில் தங்கியிருக்கின்றனர் என தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பல தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒரே விடுதியில் தங்கியிருப்பதால் ஏனைய தொழிற்சாலைகளுக்கும் கொரோனா பரவும் ஆபத்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு ஒரே விடுதியில் தங்கியிருக்கும் தொழிலாளர்கள் தங்கள் பாதுகாப்பு குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஜ-4)

# பல்கலைக்கழகங்களில் பி.சி.ஆர்.சோதனை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரால் எழுத்து மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பில், அனைத்து பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு அறிவித்த நிலையில் அனைவரும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், நேற்று முன்தினம் முதல் ஸ்ரீஜயவர்தனபுர, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஜ-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2144

### ரிது



பொதுவாக வெற்றி என்பது மற்றவர்கள் வைவிட்டுவிட்ட பின்பும் அயராமல் தொடர்வதாலேயே கிட்டுவதாகும்

### மரியா

ஒரு கார் வைத்திருந்தால் ஆடம்பரமாக வாழலாம்..



அதுவே ஒரு சைக்கிள் வைத்திருந்தால் ஆரோக்கியமாக வாழலாம்..

### அருண்


முதல் காதல் அழகை நோக்கி
கடைசி காதல் அன்பை நோக்கி



கன்னம் சுருங்கிட நீயும், மீசை நரைத்திட நானும்
வாழ்வின் அர்த்தங்கள் காணும் காலம் இது தானோ

### நிதர்சனா

நீங்கள் கூறுவது சரியாக இருக்கலாம் அதனால் பிறர் கூறுவது தவறு என்று கூறக் கூடாது..




அவர்களின் பக்கம் சிந்தித்துப் பார்த்தாலே புரியும் அது சரியா? தவறா? என்று...!

### கிருசா

ஒரு பெண் 1 மணி நேரத்திலே 25 தோசை சுட்டா
2 பெண்கள் 1 மணி நேரத்தில் எத்தனை தோசைகள் சுடுவாங்க சொல்லு



2 பெண்கள் சேர்ந்தா அவங்க பேசிக்கவே நேரம் பத்தாது
அப்போ எப்படி சார் தோசை சுடுவாங்க...

### அகிலா

எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் உங்கள் கஷ்டங்கள் மட்டும் எப்படி நிரந்தரம் ஆகும்? கவலையை விடுங்கள். வாழ்க்கையை முதலில் வாழத் தொடங்குங்கள்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கற்பித்தலில் ஆசிரியரின் சில நடிபங்குகள்

**கற்றது கை மண்ணளவு**
**கல்லாதது உலகளவு**

**கல்வி கரையில**
**கற்பவர் நாட்சில**

இது தான் கல்வியின் தாற்பரியம். கற்றது கைமண்ணளவு, கற்பவர் நாட்சில என்பதற்கமைய மாணவர்களது கலைத்திட்டம் வரையப்பட்டுள்ளது.

இக் கலைத் திட்டத்தின் மூலம் மாணவர் அறிவினைப் பெற்று போதிய அனுபவப் பதிவினை தமது மனதில் ஏற்படுத்துவர். அதனால் நல்ல கற்றல் அனுபவங்களைக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும்.

மாணவர்களையும் அவர்களது கலைத் திட்டத்தினையும் தொடர்பு படுத்தி உலகக் கல்விச் சிந்தனையாளர்கள் பல விடயங்களை முன் வைத்துள்ளார்கள். இந்த வகையில் பிளேட்டோ (கி.மு 427 - கி.மு 347), அரிஸ்டோட்டில் (கி. மு- 384 - கி.மு 322), ஜோன்டூயி (1859 - 1952), இரவீந்தரநாத்தாகூர் (1861 - 1941), மகாத்மாகாந்தி (1869 - 1948) போன்ற கல்விச் சிந்தனையாளர்களை ஆசிரியர் சமூகம் என்றுமே மறக்கமாட்டார்கள். ஒரு தொகையான பெற்றோர்களும் இவர்களைப்பற்றி அறிந்துள்ளனர்.

அதேபோன்று சிக்மண்ட்பிராய்ட் (1856 - 1939), ஜீன்பியாஜே (1896 - 1980) ஆகிய கல்வி உளவியலாளர்களையும் கல்வி உலகில் உள்ள எவருமே மறக்க முடியாது. இவர்கள் எல்லோரும் கிறிஸ்துவிற்கு முன், பின் பிறந்து வாழ்ந்தவர்கள். இவர்களால் உதிர்க்கப்பட்ட கருத்துக்கள் என்றுமே நிலையானவை. மாறுபடவும் முடியாது. அதிலிருந்து மாறுபடுவோமாயின் நாம் கல்வி உலகிற்குப் பொருத்தமற்றவர்களாகிவிடுவோம்.

கல்வி உளவியலாளர்கள் மனித வளர்ச்சியினைக் குழந்தைப் பருவம், பிள்ளைப்பருவம், கட்டிளமைப்பருவம், முதிர் பருவம் எனப் பிரித்து மட்டுமல்லாமல், ஒவ்வொரு பருவத்திலும் அவர்களது நடத்தைப் பண்புகளை வரையறுத்துள்ளனர் அல்லது வலியுறுத்தியுள்ளனர். இந்த இடத்தில் சிக்மண்ட்பிராய்ட் தொடர்பாக யோசிக்க வேண்டியுள்ளது.

அவர் உளத்தை நனவுநிலை, நனவிலி நிலை, நனவடி நிலை எனப் பிரித்து ஒவ்வொன்றையும் தெளிவாக விபரித்துள்ளார். நனவு நிலையில் பொருத்தமான நல்ல விடயங்கள் மாணவர்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். அப்பொழுது தான் மாணவர்கள் அவற்றை நினைவில் வைத்திருப்பர்.

பொருத்தமற்ற விடயங்களை ஆசிரியர்களோ பெற்றோர்களோ முன்வைத்தால் அவை நனவிலி நிலைக்குச் சென்று சில விடயங்கள் மறைந்து விட, வேறு சில விடயங்கள் நனவடி நிலைக்குச் சென்று விடுகின்றன.

வளர்ச்சிப்போக்கில் இவை மாணவர்களிடையே மீண்டெழுந்து சமூகத்திற்கு ஒவ்வாத நடத்தைக் கோலங்களை உருவாக்கி விடுகின்றன. இதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது.

இதேபோன்று ஜீன்பியாஜேயும் மனித வளர்ச்சியினை சிறுசிறு பருவங்களாக்கி, ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய அறிவு சார்ந்த பண்புகளை முன்வைத்துள்ளார். அதனால் பாடசாலைகளோ பிள்ளைகள் வாழும் சமூக சூழலோ அவற்றிலிருந்து விடுபட முடியாது.



இலங்கையின் கலைத்திட்டத்தைப் பார்க்கின்ற பொழுது ஆண்டு ஒன்றிலிருந்து பதின்மூன்று வரை விளையாட்டுச் செயற்பாடுகளும் ஏனைய கற்றல் செயற்பாடுகளும் நிறைந்துள்ளன. இதில் ஆண்டு ஒன்றில் விளையாட்டுச் செயற்பாடுகளுக்குக் கூடிய அழுத்தம் கலைத்திட்டத்தில் உள்ளது.

அதற்கப்பால் விசேடமாக ஆண்டு ஐந்தை அடைகின்ற பொழுது படிப்படியாக விளையாட்டுச் செயற்பாடுகளைக் குறைத்துக் கற்றல் செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டு போகின்றன. மாணவர்கள் கற்கும் போது அவர்களது மனநிலை மகிழ்ச்சியாக இருத்தல் வேண்டும்.

ஓடுதல், ஆடுதல், பாடுதல் போன்ற திறன்விருத்திச் செயற்பாடுகள் சில பிரதேச சமூக அமைப்பில் நிறைந்துள்ளன. வேறு சில பிரதேச சமூக அமைப்புக்களில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லை.

சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்கும் பிரதேசங்களில் இவற்றிற்கான சந்தர்ப்பங்கள் நிறைய உள்ளன. ஏனைய பிரதேசங்களில் வாழுகின்ற பிள்ளைகளைப் பொறுத்த வரையில் இந்த அனுபவங்களைக் குறைவாகப் பெறுகின்றனர்.

ஆனால் பாடசாலைகளை நாம் நோக்குகின்ற பொழுது திட்டமிட்ட செயற்பாடுகள் அங்கே இடம் பெறுகின்றன. பல பிரதேசங்களிலிருந்து வருகின்ற மாணவர்கள் இந் நிகழ்வுகளில் சம்பந்தப்படுவதால் மாணவர்கள் குதூகலம் அடைகிறார்கள். விளையாட்டுச் செயற்பாடுகள் என்று கூறுகின்ற பொழுது அதுவும் ஒரு வகை கற்றல்தான்.

அத்துடன் புது அனுபவங்களையும் அது கொடுத்துக் கொண்டிருக்கும். அதனால்தான் ஆண்டு ஒன்றிலிருந்து உயர் வகுப்புகள் போகும் வரை விளையாட்டுச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு மாணவர்களும் இயல்பு நிலைக்கு ஏற்ப இச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. உயர் நிலையில் பல முக்கியமான விளையாட்டுக்களில் இம் மாணவர்கள் சம்பந்தப்படுவதால் மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளில் பல வித்தியாசமான கலாசாரப் பண்புகளைக் கொண்ட மாணவர்களோடு கலந்து கொண்டு வெற்றியீட்டுகின்றார்கள். சமூக அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆரம்பக் கல்வியில் மாணவர்கள் பெறுகின்ற சமூக அங்கீகாரம் ஒரு வகையானது. உயர் நிலையில் அவர்கள் பெறும் சமூக அங்கீகாரம் இன்னொரு வகையானது.

சமூகமும் பாடசாலைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. அப்படி இருந்தால் தான் மாணவர்கள் வளம் பெறுவார்கள். குறித்த கல்வியின் இலக்கை அடையமுடியும். இவை இரண்டும் தொடர்பின்றி இயங்குமேயானால் பாதையும் பயணமும் வேறுவேறாக அமையும். சமூகமும் பாடசாலையும் சேர்ந்து நன்றாக இயங்கும் பாடசாலைகளை இனங்காண முடியும். அப் பாடசாலைகள்மாணவர்மூலம்நல்ல பெறுபேறுகளை அடைகின்றன.

அத்தகைய பாடசாலைகள் தன்னை நம்பி வந்த மாணவர்களைக் கரைசேர்க்கும் ஓடம் ஆகவும் கலங்கரை விளக்காகவும் திகழும். இதேபோன்று சமூகம் மற்றும் பாடசாலைகளுக்கிடையில் இணைப்பு இல்லையெனில் மேற் கூறப்பட்ட விடயங்களுக்கு எதிர் மறையான விடயங்களை நாங்கள் சந்திக்க



வீ.இராசையா
ஓய்வுநிலை
மாகாணக் கல்விப்
பணிப்பாளர், வடமாகாணம்.

வேண்டிவரும். ஆரோக்கியமான ஒரு சமூக எழுச்சியைக் காண முடியாது.

இந்த விடயங்களில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் நிதானமாகத் தொழிற்பட வேண்டும். வீடுகளில் பெற்றோர் நல்ல நேரான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**"தீயினால் சுட்ட புண்**
**உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்டவடு"**

பிள்ளைகளைப் பெற்றோர்கள் தங்கள் உயிராகத் தான் கருதுவார்கள். பொருத்தமற்றவர்களிடம் இருந்து பாதுகாப்பார்கள். எனினும் பிள்ளைகளுடைய தேவையை, ஆசையை நிறைவு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை பாவித்து விடுவர். இது பிள்ளைகளது பூப் போன்ற இதயத்தைப் பாதித்துவிடும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கமைய பெற்றோர்களும் ஆசிரியர்களும் தொழிற்படுதல் வேண்டும். ஆசிரியர்களை மாணவர்கள் தங்கள் இதயத்தில் உன்னதமான இடத்தில் வைத்திருக்கின்றார்கள். பெற்றோர்களால் செய்ய முடியாத வேலைகளை ஆசிரியர்கள் செய்வித்து விடுவார்கள்.

அதனால் ஆசிரியர்களது நடத்தையும் அக்கறையும் உயர்வாக இருக்க வேண்டும். பிள்ளைகள் கள்ளம் கபடமற்ற உள்ளங்களை உடையவர்கள். அதனால் பொருத்தமான அணுகுமுறைகளூடாக அவர்களைக் கொண்டு பொருத்தமான செயற்பாடுகளைச்செய்விக்க முடியும்.


நடைமுறையில் உள்ள பாடசாலைகளை பின்வருமாறு பிரிக்கலாம்

1) மொழித் திறனற்ற, மீத்திறன் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்

2) சராசரி மொழித்திறன், மீத்திறன் உடைய மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்

3) மொழித்திறன், மீத்திறன் கூடிய மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் (தொடரும்)

# 310 அடி பள்ளத்தில் பாய்ந்த ஆட்டோ குழந்தை உயிரிழப்பு, 6 பேர் படுகாயம்



(அப்புத்தளை)

அப்புத்தளைப் பகுதியின் கீழ் விகாரகலை என்ற இடத்தில் ஆட்டோ ஒன்று விபத்திற்குள்ளாகியதில் குழந்தை ஒன்று ஸ்தலத்திலேயே பலியானதுடன் சாரதி உட்பட அறுவர்படுகாயங்களுடன்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் பெரகலை - வெல்லவாயா பிரதான வீதியின் கீழ் விகாரகலை என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆட்டோ ஒன்றில் சாரதி உட்பட ஆறு பேர் பயணித்த நிலையில் குறித்த ஆட்டோ பாதையை விட்டு விலகி 310 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஒன்றரை வயது குழந்தை ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன் ஒரு பெண் உட்பட ஐந்து பேர் படுகாயங்களுக்குள்ளாகி ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை அரசினர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-7)



# ஆன்மீகம்

## செல்போனில் அரட்டையடித்து செல்லரித்துப் போகாதீர்கள்!

விழா முடிவில் அவரை ஒரு மாணவன் சந்தித்துச் சொன்னான்: ''ஐயா! எனக்கு தற்கொலை செய்து கொண்டு விடலாம் என்கிற எண்ணம் இருந்தது. ஆனால் உங்கள் பேச்சைக் கேட்ட பின் அந்த முடிவை மாற்றிக் கொண்டு விட்டேன்'' ''அப்படியா! மகிழ்ச்சி! என் பேச்சு அப்படி ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி விட்டதா?'' என்றார் பேச்சாளர். ''அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. உங்களைப் போன்றவர்களே வாழும் போது நான் ஏன் வாழக் கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது'' என்றான் மாணவன்.

பொதுவாகவே பேச வேண்டியதை சுருக்கினால் கேட்பவர்கள் முகம் விரிவடையும். விரிவாக்கினால் கேட்பவர்கள் முகத்தில் சுருக்கம் வரும். கீறல் விழுந்த இசைத்தட்டைப் போல் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லி மற்றவர்கள் நேரத்தைப் பாழ்படுத்துபவர்கள் தங்கள் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். 'பழம்கிளிக்கதை படிப்பவர்' என்று பாரதியார் இவர்களைச் சாடுகிறார்.

**'பயனில் சொல் பாராட்டுவனை மகன் எனல் மக்கட் பதடி எனல்'**

என்கிறார் திருவள்ளுவர். பயனற்ற சொற்களைப் பண்ணிப் பண்ணி பல முறையும் சொல்கின்றவன் மனிதனே அல்ல மனிதப்பதர் என்கிறார். இன்றைய நவீன யுகத்தில் செல்போனில் அரட்டை அடித்தே பலபேர் வாழ்வு செல்லரித்துப் போய் விடுகிறது. மகா பாரதத்தை விஞ்சும் மெகா தொடர்களாகவே பல பேர் நேரம் களவாடப்பட்டு விடுகிறது. வட்ஸ் அப்பில் வாழ்க்கையைத் தொலைப்பவர்கள் மலிந்து போய்விட்டார்கள். உரியவர்களை உடனே தொடர்பு கொள்வதற்காகவும், உபயோகமான தகவல்களை அனுப்புவதற்காகவும் மட்டுமே என் அலைபேசியை பயன்படுத்துவேன் என அனைவரும் தமக்குத் தாமே உறுதி மேற்கொள்ளவேண்டும்.

சாமியார் ஒருவர் ஒரு ஊரில் சொற்பொழிவு நிகழ்த்தப் போனார். அன்று பார்த்து பேய்மழை கொட்டித் தீர்த்தது. பிரசங்கம் கேட்க ஒருவருமே இல்லை. குதிரைலாயத்தைப் பராமரிக்கும் ஒரு ப்ணியாள் மட்டுமே அங்கு நின்று கொண்டிருந்தான். 'மழையால எல்லோரும் போய்ட்டாங்க சாமி. நான் மட்டும்தான் மிஞ்சியிருக்கேன்' என்றான்.

'அப்ப நான் திரும்பிப் போறேன். பிரசங்கம் செய்யலை' என்றார் சாமியார். 'குதிரை லாயத்தில் குதிரைகளுக்கு உணவு தர நான் செல்லும் போது எல்லா குதிரைகளும் வெளியே போய் ஒரு குதிரை மட்டும் நின்னுகிட்டு இருந்தாலும் அதுக்கு உணவு தந்துட்டுதான் நான் போவேன். நீங்களும்...'' என்று இழுத்தான் அந்த பணியாள். சாமியார் சந்தோஷப்பட்டு ''சரி உட்கார்'' என்று சொல்லி ஒரு மணி நேரம் உபந்யாசம் நிகழ்த்தி ''எப்படி இருந்தது உபந்யாசம்?'' என்று கேட் டார்.

குதிரைப் பணியாள் சொன்னான்: ''எல்லா குதிரைகளும் வெளியில போக ஒரு குதிரை மட்டும் இருந்தாலும் நான் உணவு தருவேன்தான். ஆனால், எடுத்துக்கிட்டுப் போன அத்தனை உணவையும் அந்த ஒரு குதிரைக்கே தரமாட்டேன்!'' அடுத்தவர்களுக்கு என்ன அவசியமோ அதை மட்டுமே நாம் சொல்ல வேண்டும் என்ற அறிவுரையை குதிரைப் பணியாளனிடமிருந்து பெற்றுக் கொண்டார் அந்த சாமியார்.

அறிஞர் ஒருவர் சொன்னார்: என்னைச் சந்திக்க என் அறைக்குள் சிலர் வரும் பொழுது சந்தோஷமாக இருக்கும். ஆனால், சிலர் என் அறையை விட்டுப் புறப்படும்போதுதான் எனக்கு பூரிப்பே வரும். எந்த சில ரில் நாம் இருக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்ப்போம்.

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 254 பேர் விடுவிப்பு

(கொழும்பு)

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 254 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 52,621 பேர் இதுவரையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 9 தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் 9ஆயிரத்து 703 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல்களில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (நி-7)

## கொவிட்-19 கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

சந்தர்ப்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மருத்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார். (நி-7)

## டிசெம்பரில் சீருடைத் துணி

(கொழும்பு)

பாடசாலை மரணவர்களுக்கான சீருடைகளை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து அதிபர்களுக்கும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முறை பாடசாலை சீருடை துணிகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் 4 அரச நிறுவனங்களின் கீழ் முன்னெடுக்கப்படுவதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 100 | 140 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 160 | 200 |
| தக்காளி | 140 | 140 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 100 | 80 |
| கோவா | 140 | 130 | 130 | 120 |
| கரட் | 200 | 180 | 180 | 200 |
| பூசணி | 80 | 50 | 60 | 60 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 70 | 100 |
| சின்னவெங்காயம் | 180 | 200 | 200-220 | 240 |
| பெரியவெங்காயம் | 150 | 120 | 130 | 160 |
| பாகற்காய் | 180 | 400 | 200-220 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 200 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 80 |
| போஞ்சி | 250 | 200 | 140 | 240 |
| கத்தரிதம்புள்ள | 150 | 70 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 300 | -- | 320 |
| வெங்காயப்பூ | 250 | 200 | -- | 240 |
| முள்ளங்கி | 80 | 60 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | -- | -- |




# கைகொடுப்பது எது?



ஒரு பெரிய நகரத்தில் இருந்த பெரிய கம்பனி முன்னிருந்த கடையில் ஒரு பெரியவர் சமோசா விற்றுக் கொண்டிருந்தார். அந்த வட்டாரத்தில் அவரின் கடை மிகப் பிரபலம். ஒருநாள் அந்த கம்பனி மனேஜர் கடைக்கு வந்து சாப்பிட்டுக் கொண்டே, நீங்க நல்லா நிர்வாகம் பண்றீங்க.

தொழிலை நல்லா வளர்த்திருக்கீங்க, இதுவே என்னைப் போல பெரிய கம்பனியில் நீங்க வேலையில் இருந்திருந்தால் நீங்களும் என்னைப்போல பெரிய அளவு முன்னேறியிருக்கலாம் என்றார்.

பெரியவர் புன்னகைத்துவிட்டு. இல்லை. நான் உங்களை விட நன்றாகவே முன்னேறியிருக்கிறேன். எப்படி? பத்து வருஷத்துக்கு முன் நான் இந்தத் தொழிலில் கூடையில் சமோசா விற்றபோது நீங்கள் இந்த கம்பனியில் வேலை க்கு சேர்ந்திருந்தீங்க.

அப்பொழுது என் வருமானம் மாதம் இரண்டாயிரம் ரூபாய். உங்கள் வருமானம் மாதம் இருபதாயிரம். நீங்கள் இப்பொழுது இந்த கம்பனியில் மனேஜர் ஆகி விட்டீர்கள்.

மாதம் இரண்டு லட்சம் சம்பளம் வாங்குகிறீர்கள். இப்பொழுது எனக்கு சொந்தமாக இந்த கடை இருக்கிறது. எனக்கு நல்ல பேர் இருக்கு.

நான் மாதம் ஒரு லட்சம் அல்லது அதைவிட அதிகமாகவே சிலசமயம் சம்பாதிக்கிறேன். நாளை என் வாரிசுகளுக்கு இந்தத் தொழிலை நான் தர முடியும்.

அவர்கள் என்னைப்போல இல்லாமல் நேரடியாக முதலாளியாக வந்து கடையை முன்னேற்றத்திற்கு கொண்டு வந்தால் போதும் என்றார்.

ஆனால் உங்களுக்கு அப்படியில்லை. உங்கள் பதவியை உங்கள் மகனுக்கு அப்படியே தர முடியாது. உங்களின் இத்தனை வருட உழைப்பின் பலன் உங்கள் முதலாளியின் மகனுக்குத்தான் போகும்.

உங்கள் மகன் மீண்டும் பூச்சியத்தில் இருந்து தொடங்க வேண்டும். நீங்கள் அனுபவித்த அவ்வளவு கஷ்டத்தையும் அவனும் அனுபவிப்பான்.

உங்கள் மகன் உங்களைப் போல மனேஜர் ஆகும்போது. என் மகன் எந்த நிலையில் இருப்பான் என்று நீங்களே எண்ணிப் பாருங்க என்றார். ஒருவேளை என் மகனிடம் வேலைக்கு வந்தாலும் வரலாம் என்றார். மனேஜர் சமோசாவுக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு மௌனமாகச் சென்று விட்டார்.

**நீதி :**
**கைத்தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்




ஆதுலசாலை அல்லது ஆதுரசாலை என்பது நோயாளிகள் சிகிச்சைக்காகத் தங்கிச் செல்லும் இடம் என்பதாகும்.

ராஜராஜன் காலத்தில் நாட்டு நடப்புக்களைக் கல்வெட்டுக்களில் பதிவு செய்கிற வழக்கமுள்ளதால் இந்த மருத்துவமனை குறித்த விபரங்களைக் கல்வெட்டுகளில் பொறிக்குமாறு குந்தவை பழையாறை அரண்மனையிலிருந்து ஆணையிட்டுள்ளதாக தேவராயன் பேட்டை கல்வெட்டு தெரிவிக்கிறது.

சோழர் காலத்தில் அரண்மனைகள் திருமால் கோயிலினுள்ளே அமைக்கப்பட்டது போல இந்த ஆதுலசாலையும் (மருத்துவமனை) தஞ்சை சுந்தர சோழன் விண்ணகரம் என்கிற விஷ்ணு ஆலயத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் 15 படுக்கைகள் இருந்திருக்கின்றன. ஒரு பொது மருத்துவரும் ஒரு அறுவைச்சிகிச்சை நிபுணரும் இரண்டு பெண் சிவிலியரும் மக்களின் நோய்களைப் போக்கப் பணியாற்றியுள்ளனர்.

தமது இறுதிக் காலத்தில் எல்லாமுமாக இருந்த மகன் ராஜேந்திர சோழனுக்கு கௌரவம் ஏற்படுத்திக் கொடுக்க எண்ணினார் ராஜராஜன்.

கி.பி. 1012, மார்ச் 27 முதல் ஜூலை 7 வரையிலான நாட்களில் ராஜேந்திர சோழனுக்கு இளவரசர் பட்டமளித்தார் ராஜராஜன். சுமாராக கி.பி. 970 இல் பிறந்த ராஜேந்திர சோழன் தன் நாற்பத்தைந்தாவது வயதில் சோழ மண்டலத்தின் அரசரானார்.

இரண்டு வருடங்கள் ராஜராஜனுடன் கூட்டாக ஆட்சி செய்த ராஜேந்திரசோழன் அதன் பிறகு தந்தையின் ஆசியுடன் ஆட்சியைத் தொடர்ந்தார்.

கி.பி.1014 இல் ராஜராஜனின் வரலாற்றுப் புகழ்மிக்க ஆட்சி முடிவுக்கு வந்தது. ராஜேந்திர சோழன் ஆட்சிக்கு வந்தவுடன் அதிகார மையத்தைத் தஞ்சாவூரிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்துக்கு மாற்றினார்.

தந்தையைப் போலவே ராஜேந்திர சோழனுக்கும் ஏராளமான மனைவிகள்.

ராஜாதிராஜன், ராஜேந்திரதேவன், வீரராஜேந்திரன் என்று மூன்று மகன்களும் பிரானார், அம்மங்காதேவி என்று இரு பெண்களும் ராஜேந்திர சோழனின் வாரிசாக இருந்தார்கள்.

(தொடரும்)

பழமைகள் தரும் கனி அனுபவம். அதுவே எதிர்பால விதைகளை எல்லாம் உருவாக்குகிறது
– ஆர்னால்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இயற்கையோடு மல்லுக்கட்டுவதே எங்கள் விவசாயிகளின் தலைவிதி

வட பகுதியில் மலை இல்லை. ஆறில்லை. இதனால் நீர் வளம் இல்லை என்றாயிற்று.

நில வளம் கொண்ட வட பகுதியில் நீர் வளம் இன்மையால் விவசாயிகள் இயற்கையோடு மல்லுக்கட்ட வேண்டியவர்களாக உள்ளனர்.

இப்போதெல்லாம் வயல் உழுது நெல் விதைத்து பயிர் முளைத்திருக்கையில், மழை இல்லை என்பதால் பயிர்கள் கருகத் தலைப் பட்டுள்ளன.

வயல் உழுது, வரம்பு கட்டி, நெல் விதைத்து முளைத்த பயிர்கள் கண்டு மகிழ்ந்த விவசாயி கள் மனதால் வெந்து கொள்கின்ற அள வில் மழை ஏமாற்றி நிற்கிறது.

இதே நிலைமை தென்பகுதியில் ஏற்பட வாய்ப்பில்லையாயினும் அவ்வாறு ஏற்பட்டா லும் பாய்ந்தோடும் ஆற்று நீரை – தளம் தட்டும். குளத்து நீரை வயலுக்குப் பாய்ச்சி களனி செய்ய முடியும்.

ஆனால் வடபகுதி விவசாயிகளைப் பொறுத்த வரை மழை இல்லையாயின், நெற்பயிர் கருகுவது கண்டு கண்ணீர் விட முடியுமே யன்றி வேறு என்னதான் செய்ய முடியும்.

ஈஃது, மழை இல்லை என்பதால் எம் விவ சாயிகள் படுகின்ற அவலம்.

மாறாக, இதன் மறுபக்கமும் உண்டு. அதா வது மழை அளவுக்கதிகமாகக் கொட்டித் தள்ளினாலும் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி விவசாயிகளை வேதனைக் கடலில் தள்ளி விழுத்தி விடும்.

இவ்வாறாக, நம் வடபகுதி விவசாயிகள் மழையை நம்பி வயல் செய்வதால் இயற்கை யோடு மல்லுக்கட்டி நிற்க வேண்டியவர் களாக உள்ளனர்.

எனினும் வடபகுதி விவசாயிகளின் பிரச் சினைகளை உணர்ந்து கொள்வதற்கு எவர் உளர்.

ஆம், இப்போது மழை இன்மையால் நெற் பயிர்கள் கருகிப் போகின்றன. அதேநேரம் மழை பெய்வதற்கு இன்னும் சில நாட்கள் எடுக்குமாயின், முளைத்த பயிர்கள் முற்றாகக் கருகிவிடக்கூடிய ஆபத்தும் உண்டு.

இந்நிலையில் இருந்த பணத்தை முத லிட்டு நம்பிக்கையோடு வயல் செய்த விவ சாயிகள் மனமுடைந்து, தளர்வடைந்து போகும் வேளை அதனைத் தடுத்து அவர்களைத் தாங்கிக் கொள்வது அரசாங்கத்தின் கடமை.

எனவே மழை இன்மையால் வாடி நிற்கும் விவசாயிகளுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடிய வகையில் விவசாய அமைச்சும் அத னோடு இணைந்த விவசாய அமைப்புகளும் முன்வர வேண்டும்.

இதைவிடுத்து, வடபகுதி விவசாயிகள் நெல் விதைத்தார்கள் மழை பெய்யவில்லை. அதற் கென்ன, அடுத்த முறையும் முயற்சித்துப் பார்க் கட்டும் என்று யார் நினைத்தாலும் அதைவிட்ட மாபாவம் வேறெதுவுமாக இருக்க முடியாது.

## இந்துமத சம்பிரதாயங்களை பாதுகாக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது - பிரதமர்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கம் முழு உலகிற்கும் பாதிப்பினை ஏற்படுத்தி யுள்ள சூழ்நிலையில் நவராத்திரி விரதம் மற் றும் இந்து மத சம்பிரதா யங்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் என்றும் கட மைப்பட்டுள்ளது என பிர தமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நவராத்தி விழாவை முன்னிட்டு தெரிவு செய் யப்பட்ட 40 கோயில்களு க்கு 50 ஆயிரம் ரூபா நிதியுதவி கோயில் பரிபாலன தரப்பினரிடம் நேற்று அலரி மாளிகை யில் வைத்து பிரதமரால் வழங்கி வைக்கப்பட் டது.

இந்நிகழ்வின் போது பிரதமர் இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவி க்கையில்,

நெருக்கடியான நிலை யில் நவராத்திரி விழா வையொட்டி தெரிவு செய்யப்பட்ட கோயில்க ளுக்கு நிதியுதவி வழங் கப்படுகிறது. இது நாட் டுக்கு நன்மை பயக்க வேண்டும் என பிரார் த்தித்துக் கொள்கி றேன்.

மத விவகாரங்கள் என்ற அடிப்படையிலும், பிரஜை என்ற அடிப்படையிலும் இந்த மத சம்பிரதாயங் களை பாதுகாப்பது அர சாங்கத்தினது பொறுப்பா கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## காடழிப்பு குறித்து முறைப்பாடளிக்க அவசர தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

சுற்றுச்சூழல் பாதிப்புக் கள் குறித்து அரசாங்கம் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு வருகிறது. அதற்கமைய சட்ட விரோ தமாக இடம்பெறும் காட ழிப்பு உள்ளிட்ட சூழல் பாதிப்புக்கள் குறித்து முறை ப்பாடளிப்பதற்கு 1991 , 1981 மற்றும் 1921 என்ற அவசர தொலைபேசி இல க்கங்கள் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளதாக சுற்றா டல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் எந்தப் பகுதியிலும் சுற்றா டலுக்குப் பாதிப்பை ஏற்ப டுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடு க்கப்பட்டாலும் அவை தொட ர்பில் தகவல்களைப் பெற் றுக் கொள்வதற்காகவே இந்த அவசர தொலை பேசி இலக்கங்கள் அறிமு கப்படுத்தப்பட்டுள்ளன. சுற்றாடல் அமைச்சினால் 1991 என்ற இலக்கமும் மத்திய சுற்றாடல் அதி காரசபையினால் 1981 என்ற இலக்கமும் புவிச ரிதவியல் திணைக்களத் தினால் 1921 என்ற இல க்கமும் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதி காரசபை மற்றும் புவிசரி தவியல் திணைக்களம் என்பவை முறையான நடவடிக்கைகளை முன் னெடுக்காவிட்டால் என க்கு நேரடியாக அறிவிக்கு மாறு பொது மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

காடழிப்பு தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் மற்றும் அவரது தரப்பின ரால் போலியான பிரசா ரங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. அவர்களி டம் உண்மையான ஆதா ரங்கள் இருக்குமாயின் என்னுடன் பகிரங்க விவா தத்திற்கு வருமாறு அழை ப்பு விடுக்கின்றேன் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## திரையரங்குகள் தற்காலிகமாக மூடல்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நில வும் கொரோனா அச்சுறு த்தல் காரணமாக அனை த்து திரையரங்குகளை யும் தற்காலிகமாக மூடுவ தற்குத் தீர்மானிக்கப்பட்டு ள்ளது. இதன்படி எதிர்வ ரும் 31 ஆம் திகதி வரை அனைத்துத் திரையரங் குகளையும் மூடுவதற் குத் தீர்மானிக்கப்பட்டுள் ளதாக இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தலைவர் ஜெயந்த தர்ம தாச தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று கார ணமாகச் சுகாதார அமைச் சின்ஆலோசனையின் அடி ப்படையில்இந்த முடிவு எடு க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

### இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

இதை அருணகிரிநாதர்
"மாவேழ் ஜனனங்கெட மாயைவிட
மூவேடனை என்று முடித்திடுமோ?"
என்று கூறுகின்றார்.

நமது முன்னோர்கள் செய்த சடங்குகள் அர்த்தமற்றவை என்று தள்ளாமல் நுனித்து உணர்வது மதியுடமையாகும்.

இந்த ஆன்மாக்களுக்குச் செய்யும் வழிபாடு கள் அவர்களுக்கு நாம் செய்கின்ற நன்றிக் கடனாகும்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தா னென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை
-திருக்குறள் (தொடரும்)

### வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மகிழ்ச்சி என்பது முக்கியமே. ஆனால் 365 நாட் களும் மகிழ்ச்சியுடன் இருப்பது போன்ற துன்பம் வேறில்லை. -கன்பூசியஸ்

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### குருவே இலக்கு

குரு என்பவர் விவேக ஞானமும் அன்பும் அன்றி வேறொன்றுமில்லை.

குரு அடிப்படை மூலமான விவேக ஞானமும் அன்பும் ஆவார். ஆத்ம ஞானத்தையடையும் பாதை யிலுள்ள ஒவ்வொருவரிடமும் அவை விழித்தெழச் செய்யப்படுகின்றன. யாருடைய வாழ்விற்கும் விவே கத்திற்கும் அன்பிற்கும் இடையே இடைவெளி இல் லையோ அவரைத் தான் நீ குரு என்று அழைக் கிறாய்.

பெரும்பாலும் நாம் விவேகத்தைக் கண்டு கொள்கி றோம். ஆனால் விவேகத்திற்கும் வாழ்க்கைக்கும் இடையே இடைவெளியைக் காண்கிறோம். சீடனாக ஆவதன் நோக்கமே இந்த இடைவெளிக்குப் பாலம் அமைப்பது தான்.

குருவுடன் இருப்பது என்றால் முயற்சி ஏதுமின்றி மிக இயல்பாக வாழ்க்கையையும் விவேகத்தையும் ஒன்றுபடுத்தலாகும்.

### அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### அழகன் முருகப்பெருமானின் ஆயுதங்கள்

**அம்பு**

வில்லை வளைத்து எய்யப் பயன்படக் கூடியது அம்பு. நுனி கூரிய முள் போன்றது. நுனியை ஒரு கழி யில் செருகியிருப்பார்கள். நுனி இரும்பால் ஆகியது. அதன் வால் பாகத்தில் கழுகின் இறகுகளையும் மற்ற பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும் பாலும் கழுகு இறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டுவதால் காற்றை ஊடுருவி விரைந்து செல்லும்.

**கத்தி**

பகைவரை அடிக்கவும் குத்தவும் பயன்படும் இந்த ஆயுதம் கைப்பிடியுடன் இருக்கும்.


**கேடயம்**

கத்தியின் வெட்டையும், குத்தையும் தடுப்பதற்காகப் பயன்படுத்துவது பலகையாலும் வலுவுள்ள காட்டெ ருமை, கடமா நீரயானை, காண்டாமிருகம் இவற்றின் தோலாலும் தயாரிப்பார்கள். பல வடிவங்களில் சதுரம், நீளச் சதுரம், வட்டம், முக்கோணம் என்ற அமைப் புகளில் காணப்படுவது.

**வாள்**

இதற்கு கட்டுவாங்கம் என்றும் பெயர். இது நீளமான கத்தியாகும். போரில் பகைவர்களை வெட்ட பயன்படு வது. இதில் ஒரு முனையுடையதும் இரு முனைய டையதும் உண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியை உடையதாக இருக்கும். பழங்கால மன்னர்கள் இடுப் பில் செருகியிருப்பதை வழக்கமாகக் கொண்டிருப் பர்கள். (தொடரும்)

# ராஜஸ்தானை வீழ்த்தியது டில்லி



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற 30 ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கேப்பிட்டல்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற டில்லி கேப்பிட்டல்ஸ் அணி கப்டன் ஷ்ரேயாஸ் அய்யர் பட்டிங்கை தேர்வு செய்தார்.

அதன்படி பிரித்வி ஷா, ஷிகர் தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். முதல் ஓவரை ஆர்சர் வீசினார். முதல் பந்தில் பிரித்வி ஷா க்ளீன் போல்டானார்.

அடுத்து வந்த ரகானே 2 ரன்னில் ஏமாற்றம் அளித்தார். 3 ஆவது விக்கெட்டுக்கு தவான் உடன் ஷ்ரேயாஸ் அய்யர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. குறிப்பாக தவான் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 33 பந்தில் 57 ரன்கள் விளாசி ஆட்டமிழந்தார்.

ஷ்ரேயாஸ் அய்யர் 53 ரன்கள் எடுத்து வெளியேறினார். இந்த ஜோடி 3 ஆவது விக்கெட்டுக்கு 85 ரன்கள் குவித்தது.

மார்கஸ் ஸ்டாய்னிஸ் 18 ரன்களும், அலேக்ஸ் கேரி 14 ரன்களும் அடிக்க டில்லி கேப்பிட்டல்ஸ் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 161 ரன்கள் அடித்துள்ளது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிசார்பில் ஆர்சர் 4 ஓவரில் 19 ரன்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 162 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஜோஸ் பட்லர் ராஜஸ்தான் அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

தொடக்கம் முதலே இரு வீரர்களும் அதிரடியாக ஆடினர். 9 பந்துகளை சந்தித்து 1 சிக்சர் 3 பவுண்டரிகள் உட்பட 22 ரன்கள் குவித்த பட்லர் நோர்ட்ஜே பந்து வீச்சில் அவுட் ஆனார்.

அடுத்து வந்த கப்டன் ஸ்டீவ் ஸ்மித் 4 பந்துகளில் 1 ரன் எடுத்திருந்த நிலையில் அஸ்வின் பந்து வீச்சில் வெளியேறினார். அடுத்து வந்த சஞ்சுவ் சாம்சனுடன் இணைந்த பென் ஸ்டோக்ஸ் அணியின் ஸ்கோரை மெல்ல உயர்த்தினார். 35 பந்துகளில் 41 ரன்கள் எடுத்திருந்த பென் ஸ்டோக்ஸ் துஷார் பந்து வீச்சில் வெளியேறினார்.

அடுத்து வந்த ராபின் உத்தப்பா, சஞ்சுவ் சாம்சனுடன் சேர்ந்து அதிரடியாக விளையாடினார். 18 பந்துகளை சந்தித்த சஞ்சுவ் சாம்சன் 2 சிக்சர் உட்பட 25 ரன்னிலும், 27 பந்துகளை சந்தித்த உத்தப்பா 1 சிக்சர், 3 பவுண்டரி உட்பட 32 ரன் குவித்து வெளியேறினார்.

பின்னர் வந்த வீரர்கள் இறுதிக் கட்டத்தில் அதிரடியாக விளையாடாததால் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்த ராஜஸ்தான் 148 ரன்கள் மட்டுமே எடுத்தது.

18 பந்துகளை சந்தித்து 14 ரன்கள் எடுத்திருந்த ராகுல் தேவாட்டியா கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இதனால், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை 13 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி டில்லி கேப்பிட்டல்ஸ் அணி திரில் வெற்றி பெற்றது. (4)

# உலக கிண்ண கால்பந்து தகுதி சுற்றில்

## நெய்மர் ஹெட்ரிக் கோல்



உலக கோப்பை கால்பந்து தகுதி சுற்றில் பிரேசில் வீரர் நெய்மர் பனால்டி வாய்ப்பை கோலாக்கிய கடைசி நிமிடத்தில் 3 ஆவது கோல் அடித்து 'ஹெட்ரிக்' சாதனை படைத்தார்.


உலக கோப்பை கால்பந்து போட்டி 2022 ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறுகின்றது. இதற்கான தென்னமெரிக்க கண்டத்துக்கான தகுதி சுற்று போட்டியில் 10 அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் உலக கோப்பை போட்டிக்கு நேரடியாக தகுதி பெறும்.

கடந்த 13 ஆம் திகதி பெரு தலைநகர் லிமாவில் நடைபெற்ற ஆட்டத்தில் 5 முறை உலக சம்பியனான பிரேசில் அணி, பெருவை சந்தித்தது. 6 ஆவது நிமிடத்திலேயே பெரு வீரர் ஆந்த்ரே கரில்லோ கோல் அடித்து அதிர்ச்சி அளித்தார்.

இதன் பின்னர் 28 ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மர் கோல் அடித்து சமனுக்கு கொண்டு வந்தார். 59 ஆவது நிமிடத்தில் பெரு வீரர் ரெனட்டோ டாபியா கோல் போட மறுபடியும் அந்த அணி முன்னிலை பெற்றது. 64 ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் ரிச்சர்லிசன் பந்தை வலைக்குள் திணித்தார். தொடர்ந்து 83 ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு பனால்டி வாய்ப்பை கோலாக்கிய நெய்மர் கடைசி நிமிடத்தில் 3 ஆவது கோல் அடித்து 'ஹெட்ரிக்' சாதனை படைத்தார். முடிவில் பிரேசில் 4-2 என்ற கோல் கணக்கில் பெருவை வீழ்த்தி 2 ஆவது வெற்றியை பதிவு செய்தது. 28 வயதான நெய்மர் இதுவரை 64 சர்வதேச கோல்கள் (103 ஆட்டம்) அடித்துள்ளார். பிரேசில் அணிக்காக அதிக கோல் அடித்தவர்களின் வரிசையில் 2 ஆவது இடத்தில் இருந்த ரொனால்டோவை (62 கோல்) பின்னுக்கு தள்ளினார். முதலிடத்தில் உள்ள பீலேவையும் (77 கோல்) விரைவில் முந்தி விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# விஜய் சேதுபதியின் 800

## தீவிரமடையும் எதிர்ப்புக்கள், படக்குழுவின் திடீர் அறிக்கை




இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் வாழ்க்கை வரலாற்றை மையமாக கொண்ட திரைக்கதை அடிப்படையில் எடுக்கப்பட இருக்கும் "800" திரைப்படத்திற்கு எதிர்ப்புகள் தமிழ்நாட்டில் தீவிரமடைந்து வரும் நிலையில் படக்குழுவினர் திடீர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

முத்தையா முரளிதரன் வாழ்க்கை வரலாறு படத்தில் முரளிதரனாக நடிக்கும் விஜய் சேதுபதிக்கு கடுமையான எதிர்ப்புகள் காட்டப்பட்டு வருகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கையை மையப்படுத்தி 800 என்ற படத்தை உருவாக்கவுள்ளனர். ஸ்ரீபதிரங்கசாமி இயக்கும் இந்த படத்தில் முத்தையா முரளிதரனாக விஜய் சேதுபதி நடிக்கிறார். இந்தப் படத்தில் விஜய் சேதுபதி நடிப்பதற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. "முரளிதரன் கண்டியில் பிறந்த தமிழராக இருந்தாலும் விடுதலைப்புலிகள் போராடியபோது சிங்களத்தின் பக்கம் நின்று துரோகம் செய்தார். அவரது கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி நடிக்கக் கூடாது" என்று கண்டித்தனர்.

அண்மையில் மோசன் போஸ்டர் வெளியான நிலையில் விஜய் சேதுபதிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக "ஷேம் ஆன் விஜய்சேதுபதி" என்ற ஹேஷ்டேக் டுவிட்டரில் டிரெண்டாக்கி வருகின்றனர்.

இதுதவிர பல தரப்பட்டவர்களும் சமூக வலைத்தளங்களில் நடிகர் விஜய்சேதுபதிக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழ்நாட்டில் குறித்த திரைப்படத்தை திரையிடும் திரையரங்குகள் அடித்து உடைக்கப்பட்டு திரைகள் கிழிக்கப்படும் என சமூகவலைத்தளங்களில் மிரட்டல் பதிவுகளும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

தமிழினப் படுகொலைக்கு ஆதரவாக முரளிதரன் தெரிவித்திருந்த கருத்துகளும், ராஜபக்ஷ தரப்பிற்கு ஆதரவாக இருப்பதையும் அடிப்படையாகக் கொண்டே தமிழ்நாட்டில் இத்திரைப்படத்திற்கு எதிர்ப்புகள் வலுவடைந்து வருகிறது.

இந்நிலையில் படக்குழுவினர் திடீர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது,

முத்தையா முரளிதரன் வாழ்க்கை வரலாறு விஜய் சேதுபதி நடிக்க இருக்கும் 800 திரைப்படம் பல்வேறு வகையில் அரசியல் ஆக்கப்பட்டு வருவதை அறிகிறோம். 800 திரைப்படம் முழுக்க ஒரு கிரிக்கெட் வீரரின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட படமே தவிர, இதில் எந்தவித அரசியலும் கிடையாது.

தமிழகத்தில் இருந்து தேயிலைத் தோட்டக் கூலியாளர்களாக இலங்கைக்கு குடிபெயர்ந்த ஒரு சமூகத்தில் இருந்து வந்த முரளிதரன் எப்படி பல தடைகளைத் தாண்டி உலக அளவில் சிறந்த பந்து வீச்சாளராக உயர்ந்தார் என்பது தான் திரைப்படத்தின் கதையம்சம்.

திரைப்படம் இளைய சமுதாயத்துக்கும் வருங்கால விளையாட்டு வீரர்களுக்கும் தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் எவ்வளவு தடைகள் வந்தாலும் தடைகளைக் கடந்து சாதிக்க முடியும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தும் படமாக இருக்கும்.

இத்திரைப்படத்தின் தயாரிப்பாளராக ஒன்றை மட்டும் நிச்சயமாக சொல்ல முடியும். இத்திரைப்படத்தில் ஈழத் தமிழர்களின் போராட்டத்தை சிறுமைப்படுத்தும் விதத்திலான காட்சியமைப்புகள் கிடையாது எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

## வவுனியாவில்...

மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி யோகநாதன் நிசாந்தன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் மற்றும் மடுகந்தை விசேட அதிரடிப் படையினரும் இணைந்து வவுனியா பாவற்குளம் பகுதியில் மேற்கொண்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோதமான முறையில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை உபயோகித்து மீன்பிடியில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளும் கைப்பற்றப் பட்டுள்ளன. (ம-3,299)

## யாழ்.சுண்டுக்...

இதையடுத்து, யாழ். மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும் வீட்டின் பெரும்பாலான பகுதி எரிந்து போனதாகவும், அங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்கள் சாம்பலாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## அளவெட்டி தம்ம...

இடம்பெற்றுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத சமயம் பட்டப் பகலில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டி மேற்கு தம்மளைப் பகுதியில் அரச அலுவலகத்தில் பணி புரியும் பெண் ஒருவர் வீட்டில் வியாழக்கிழமை பகல் வீட்டில் எவரும் இல்லாத நேரம் 5 பவுண் நகை களவு போயுள்ளதாக தெல்லிப்பளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,110)

## முகக் கவசம்...

யில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பகுதியில் தங்கும் விடுதி ஒன்றில் முகக்கவசம் அணியாமல் இருந்த இளைஞர் மற்றும் யுவதியை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

➤24

## நிலைமைகள்...

ஜனாதிபதி செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் குறித்து நாளாந்தம் வெளியாகின்ற புள்ளிவிபரங்களை அதிகாரிகள் அவதானித்து வருகின்றனர்.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான தொற்றாளர்கள் காணப்படும் பகுதிகளில் அவசியமென்றால் ஊரடங்கை பிறப்பிப்பதற்கு அரசாங்கம் தயார். ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட பகுதிகள் பிறப்பிக்கப்படாத பகுதிகளில் காணப்படும் நிலைமையை அவதானித்து வருகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்களையும் அடையாளம் கண்டுள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## நாடளாவிய ரீதி...

கொரோனா கொத்தணிகள் ஆங்காங்கே ஏற்படலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் எச்சரித்துள்ளனர்.

கொரோனா வைரஸினால் நாடளாவிய ரீதியில் பாதிக்கப்படுகின்ற நோயாளர்களின் தகவல்கள் ஒரிடத்தில் சேர்க்கப்படாததினால் மீண்டும் ஒட்டுமொத்த நாடும் முடக்கப்படும் அபாயமே ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் நாட்களில் சிறிய கொரோனா கொத்தணிகளும் ஏற்படலாம் என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னணி மருத்துவத்துறை தொழிற்சங்கமாகிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கொழும்பில் நேற்று விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியது.

குறிப்பாக கொரோனா வைரஸிற்கு ஆளாகிய மினுவாங்கொடை பெண் ஊழியருக்கும் அதேபோல கேகாலை மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த 03 மருத்துவர்களுக்கும் எங்கிருந்து தொற்று ஏற்பட்டது என்பது மர்மமாகவே காணப்படுகிறது.

இந்த விவகாரம் குறித்தும் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்த சங்கத்தின் உதவிச் செயலாளரான மருத்துவர் ஹரித்த அலுத்கே கருத்து வெளியிட்டார்.

'இதற்கு முன் வெலிசற முகாமில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் கொத்தணி முழுமையாக கண்டுபிடிக்கப் பட்டது. எனினும் தற்போது மினுவாங்கொடை கொத்தணி என்பது இன்னும் முழுமையாக கண்டுபிடிக்க முடியாத புதிராக உள்ளது. அந்த தொழிற்சாலையைச் சேர்ந்த ஊழியர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்றுள்ளனர்.

வட மாகாணம், தெற்கு, மத்திய போன்ற பல மாகாணங்களிலும் இருந்து தொழிலாளர்கள் அங்கே வேலை செய்திருக்கின்றனர். இருப்பினும் கேகாலை வைத்தியசாலையில் 03 மருத்துவர்களுக்கு எப்படி கொரோனா தொற்று ஏற்பட்டது என்பது பற்றி இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை.

பிரதானமாக தொற்றுக் கொத்தணி ஏற்படாது என்கிற போதிலும், இவ்வாறு சிறிய சிறிய கொத்தணிகள் ஏற்படக்கூடிய அபாயத்தில் நாடு உள்ளது.

இதுபற்றியே சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவுடன் நாங்கள் பேச்சு நடத்தினோம். இந்த சந்தர்ப்பத்தில் எப்படி சுகாதாரத் துறையும் அரசாங்கமும் நடந்து கொள்ள வேண்டும், முழு நாடுமே முடக்கப்படாத வகையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது பற்றிய கடிதமொன்றையும் நாங்கள் ஜனாதிபதிக்கு இதற்குமுன் கையளித்திருக்கின்றோம்.

கொரோனா தொற்று பற்றிய தகவல்கள் இன்று பல பிரிவினரிடையே இருக்கின்றன. இராணுவத்தினரிடமும், தொற்றுநோய் ஆய்வுப் பிரிவிடமும் எனப் பல பிரிவுகளில் அந்த தகவல்கள் உள்ளன. இந்த தகவல்கள் அனைத்தும் ஒரிடத்திற்கு வரவேண்டும்" என்றார்.

இதேவேளை, சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத், கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

தற்போதைய கொரோனா பரவல் அச்சப்படக் கூடிய நிலைவரம் என்று கூற முடியாது எனத் தெரிவித்த அவர், மழை காலம் ஏற்படுகின்ற நிலையில், கொரோனா வைரஸ் உட்பட மேலும் பல இன்னல்களை மக்கள் சந்திக்க நேரிடலாம் என்றும் அச்சம் வெளியிட்டார்.

"சீரற்ற காலநிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஏனைய நோய்களும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது. மழையுடனான காலங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம்.

அப்படியிருக்கையில், கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தால் சுகாதாரத்துறை பணியாளர்களுக்கு மிகப்பெரிய சங்கட நிலைமை ஏற்படலாம்.

அதிக மழை காலத்திலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மண் சரிவு மற்றும் வெள்ள அனர்த்தமும் ஏற்படலாம்.

அப்படியான சந்தர்ப்பங்களில் இடம்பெயர்வுகள் ஏற்படும். அந்த தருணத்திலும் சுகாதார பணியாளர்கள் சங்கடநிலைக்குத் தள்ளப்படலாம். எனவே மக்கள் தாமாகவே முன்வந்து சுகாதாரப் பணியாளர்களின் கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கொழும்பு மாவட்டத்தில் தற்போது 06 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவது அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டதாகும். இதிலும் கூட மக்கள் இன்னும் அதிகமாக சுகாதார நெறிமுறைகளை கடைப்பிடிப்பது அவசியமாகும்" என்று கூறினார். (ம-3)

## குடும்பப் பெண்...

றுள்ளது.

சம்பவத்தில் முருகானந்தன் சிரோமி (வயது-30) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3)

## 74 பேருக்கு...

ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

ஏனைய 61 பேரும் பல்வேறு வழிகளில் தொற்றாளர்களுடன் பழகியவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கண்டறியப்பட்ட 74 தொற்றாளர்களையும் சேர்த்து, இதுவரை மினுவாங்கொட தொற்று கொத்தணியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 1795. ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 3 பேருக்கு...

யில் 3 பேருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் 193 பேரின் மாதிரிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதில் 3 பேருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.


மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள முல்லைத்தீவு மையத்திலுள்ள 3 பேரே தொற்றிற்குள்ளாகினர். (ம-3,18)




















## இலங்கையின் இறைமையையே அடகு வைக்கும் நிலைக்கு அரசாங்கம் சென்றுள்ளது

### ராஜபக்ச அரசை சாடினார் சுரேஸ்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் நாட்டின் இறைமையையே அடகு வைக்கும் நிலைக்குச் சென்றுள்ளது என ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதனால், இலங்கைத் தீவிலும் இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்திலும் அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிடும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மேலும், இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை என்பது இப்பொழுது பாரிய விவாதத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் சீன உயர்மட்டக் குழுவின் வருகையும், அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் மைக்பொம்பியோ வரவிருப்பதும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

அத்துடன், இந்திய - இலங்கை பிரதமர்களுக்கிடையிலான காணொளித் தொடர்பாடல் மூலமான பேச்சுவார்த்தைகளும் ஊடகங்களில் பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, மாறிமாறி வந்த இலங்கை அரசாங்கங்களின் தமிழர் விரோத உள்நாட்டுக் கொள்கைகளும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வெளிநாட்டு உதவிகளும் இலங்கையை ஏற்கனவே பொருளாதார ரீதியாக படுபாதாளத்தில் தள்ளியிருக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

## 10 ஆயிரம்...

புதிய கோவிட் -19 தடுப்பு விதிமுறைகள் குறித்த வர்த்தமானி அறிவிப்பை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

புதிய வர்த்தமானி அறிவிப்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று கையெழுத்திட்டார்.

புதிய கொரோனா தொற்று தடுப்பு விதிமுறைகளுள் தனிநபர்கள் பொது இடங்களில் சமூக இடைவெளியை பேணுதல் மற்றும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானியின்படி, கொரோனா தொற்று கட்டுபாட்டு விதிமுறைகளை மீறும் நபர்கள் 06 மாதங்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள் அல்லது 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வர்த்தக மற்றும் பணி இடங்களுக்குள் பிரவேசித்தல் மற்றும் பேணுதல் போன்ற விடயங்களும் இந்த வர்த்தமானி அறிவிப்பின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (ம-03)

## முல்லைத்தீவு...

வீதி விபத்தில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை பகுதியில் இன்று இரவு வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த குறித்த பொலிஸ் அதிகாரி வீதியால் வந்த உளவு இயந்திரம் ஒன்றை நிறுத்திய போது குறித்த உழவு இயந்திரம் நிறுத்த முற்பட்ட வேளையில் விபத்துக்குள்ளானதில் குறித்த பொலிஸ் அதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸ் அதிகாரியான 42 அகவையுடைய தேய்ந்த என்ற அதிகாரியாவார்.

விபத்து தொடர்பில் முல்லைத்தீவு பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03.281)

## முகக்கவசம்...

நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் கொரோனா வைரஸ் பரவும் விதத்தில் செயற்பட்டார்கள் என அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

குறித்த இருவரும் தாங்கள் கொரோனா தொற்று பரவும் விதத்தில் செயற்படவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து குறித்த வழக்கு ஜனவரி 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், குறித்த இருவரும் மதிய உணவை உண்பதற்காக முகக்கவசம் அணியாமல் இருந்ததாக அவர்களது சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் இருவரையும் இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்க புறக்கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

## சுகாதார...

வருவதாவது.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நபர் ஒருவர் இரகசியமாக வேறொரு நோய் அறிகுறியை குறிப்பிட்டு அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதியாகியுள்ள நிலையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் திஸ்ஸமஹாராம பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவர் கடந்த 12 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தப்பட்டு இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் பி.சி.ஆர் பரிசோதனைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் வயிறு வலி என தெரிவித்து கடந்த 13 ஆம் திகதி இரவு அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதியாகியுள்ளார்.

இதன்போது அங்குள்ள 18 ஆம் வார்டில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் அவர் தொடர்பில் ஆராய்ந்ததில் பொய்யான தகவல்களை வழங்கி அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதியாகி உள்ளதாக தெரிய வந்துள்ளது.

அதேபோல் குறித்த நபர் யால தேசிய பூங்காவில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் சுற்றுலா வழிகாட்டியாக செயல்பட்டு வந்துள்ள நிலையில் கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களில் இருந்து வந்த சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வருகை தந்த நபர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு உள்ளதா என்பது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும் தொற்றாளருடன் சுற்றுலா ஹோட்டலில் தங்கியிருந்த 61 ஊழியர்கள் மற்றும் 61 வெளி ஊழியர்களும் தற்போது தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். (ம-03)


போட்டிப் பரீட்சைகளுக்கான Zoom வகுப்புக்கள்
சகல பரீட்சைகளுக்கான சகல வினாத்தாள்களுக்கும் வெவ்வேறான பிரிவுகளாக
விரிவுரையாளர் த. தவசேகர் உடன் துறைசார்ந்த வளவாளர்கள்
தொடர்புகளுக்கு 076 688 3394

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், இராச வீதி, நவகிரி வங்கி வீதியில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை முன்பாக 12 பரப்புக் காணி விற்பனைக்கு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
1 பரப்பு பின்பகுதி 5 இலட்சம் ரூபாயும் முன்பகுதி 6 இலட்சம் ரூபாயும்
தொடர்பு : 077 805 1655

**வீடு விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாணத்தில் இராச வீதியிலுள்ள கொம்பன் வீதியில் 2 பரப்புக் காணியுடன்வீடு, 6 பரப்புக் காணியும் உள்ளது.
மாசுவன் சந்திக்கு அருகாமையில் (100 மீற்றர் நடைதூரம்)
077 805 1655

**காணி விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மில் வீதியில், நாதன் பிரான் கோயிலுக்கு அருகாமையில் 28 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 1 பரப்பு 5 இலட்சம் ரூபாய். 2 பரப்புக்களாக பிரித்துக் கொடுக்கப்படும். (தரகர் தேவையில்லை.)
077 190 4814

**வீடு விற்பனைக்கு**
பிரம்படி 2ஆம் ஒழுங்கை கொக்குவிலில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு
076 702 3565

**மணமகள் தேவை**
இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)
Jeyaratnam1988@gmail.com 077 219 4331

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS UK-1025/= Kg
0768226240

**துயர் பகிர்கின்றோம்...**





எமது கல்லூரியின் ஆசிரியர்களான திருமதி ரே. தர்ஷீலன் அவர்களின் அன்புத் தந்தையும் திரு. து. ஹரிகரன் அவர்களின் அன்பு மாமனுமாகிய
அமரர் வயித்திலிங்கம் இராசதுரை
(ஓய்வுபெற்ற இ. போ. ச சாலைப் பரிசோதனைப் பொறுப்பதிகாரி)
அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் கழகம், யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

**அமெரிக்க லொத்தர் விசா**
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2022ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960
V2 Travels www.facebook.com/v2tandt

**வேலைவாய்ப்பு**
கிளிநொச்சியில் பிரபல புத்தகசாலையில் பணியாற்றுவதற்கு A/L படித்த ஆண் / பெண் பணியாளர் தேவை.
T.P : 077 455 2854

**தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் சிறந்த முறையில் செய்து தரக்கூடிய மேசன், கூலியாட்கள் தேவை.
076 316 5734, 077 985 1946


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.